# விளைச்சல்

(குறுங்காவியம்)



செங்கதிரோன்

'செங்கதிர்' இலக்கிய வட்ட வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைச்சல்

## (குறுங்காவியம்)

செங்கதிரோன்

வெளியீடு: 'செங்கதிர்' இலக்கிய வட்டம், மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளைச்சல் (குறுங்காவியம்)


ஆக்கம் - செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்
இல- 607, பார்வீதி, மட்டக்களப்பு
தொ. இல - 0771900614
மின்னஞ்சல் - senkathirgopal@gmail.com

பதிப்புரிமை - ஆசிரியர்

வெளியீடு - செங்கதிர் இலக்கிய வட்டம், மட்டக்களப்பு
வெளியீடு - 01

முதற்பதிப்பு - சித்திரை 2017

கணணி வடிவமைப்பு - குமரன் புத்தக இல்லம்

அச்சுப்பதிப்பு - குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06
தொ. இல: 0112364550, 0113097608
மின்னஞ்சல்: kumbhlk@gmail.com

விலை - 400/=

ISBN - 978-955-7409-00-9





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பு

## அந்த அந்திமக் கணங்கள்!

அம்மா!
ஊனை மறந்து உலகத்தின் பற்றறுத்து
மோனத் தவமியற்றும் முனிவனைப்போல் பேச்சற்று(ப்)
படுத்துக் கிடந்தீர்கள்.
பக்கத்தில் வந்தமர்ந்து.
அம்மா! என்றழைத்து "ஆரம்மா நான்?" என்று
அடுத்தடுத்துக் கேட்டவுடன்.
'தம்பி' என்று நீங்கள் சத்தமிட்டுச் சொன்னீர்கள்.
சற்றும் நான் இதனை எதிர்பார்க்கவில்லையம்மா!
சந்தோஷத்தில்,
இளையக்காவை அழைத்து இதனை இயம்பினேன்.
சாவதற்கு முதல் நாள் நடந்த இச் சம்பவத்தை
நினைக்கின்றேன் - உங்களது
வாய் திறந்து உதிர்த்த - இறுதி
வார்த்தை இதுதானே.

தோடம்புழச்சாற்றைத் தொண்டைக்குள் மூன்றுதரம்
பருக்கினேன் அம்மா! பருக்கிச் சிலநிமிடத்தில்.
கழுத்துச் சவளவும்
கண்கள் மேல் சொருகவும்
கண்ணுற்றேன் அம்மா!
காலன் வரவுணர்ந்தேன்.
"பெரியக்கா! கால்களை நீ
பிணைத்துப் பிடி" என்றேன்.
'இளையக்கா! ஓடி வா
இறுக்கி வாய் மூடு" என்றேன்.
சுனீத்தாவைக் கூப்பிட்டுச்
சொன்னேன் "நேரம்பார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா!
இறுதியாய் உங்கள்
விழிகளை என்பெரு விரல்கள் மூடின.
முகத்தில் என் முகம் புதைத்து - உங்கள்
கடைசி மூச்சொலியைக்
காதுவைத்துக் கேட்கையிலே
அன்று மாலை 5.10 க்கு
அந்தோ! அம்மா! - உங்கள்
ஆவி அடங்கிற்று! - அந்த
அந்திமக் கணங்கள்.
கல்லின்மேல் விழுந்த காட்சிப்படிமமாய்
மறுபடியும் மறுபடியும் - என்
மனக்கண் முன் தோன்றுதம்மா!

இறுதியாத்திரைக்காய் - என்
இருகரங்களும் நடுங்க - உங்கள்
கால்களைக் கழுவுகையில் - நான்
அதுவரையில்,
அடக்கி வைத்த துக்கம் அணை உடைத்துப் பாய்ந்ததம்மா!
கண்ணீர்த் தாரையாலும் - உங்கள்
கால்களைக் கழுவி வைத்தேன்.
செத்துக் கிடந்தாலும் செழுமை குறையாத
உங்கள்.
வதனத்தைத் தடவி வாய்க்கரிசி இட்டேன் நான்.
அப்பா இறக்கையிலே,
பன்னிரண்டு வயது எனக்கு.
குடும்பத்தில் மூத்தமகன் கொள்ளிகுடம் நான் வைத்தேன்.
அப்பா இறந்து நாற்பது வருடங்கள்
எங்களைக்காப்பாற்ற எத்துணைக் கஸ்டங்கள்
ஏற்றிருப்பீர்கள் அம்மா!

இளையமகன் யோகம் இங்கில்லை என்பதனால்
ஈமக்கிரியைகளை.
மூத்த மகன் நான்தான் முடித்துவைக்க வேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுள்ளபோது - முன்பே
முடிவெடுத்தா போனீர்கள்?
இருவருக்கும் கொள்ளி வைக்க இறைவன் எனை வைத்துவிட்டான்.

எட்டாம் நாள் சடங்கில் என்
செவிகளில் கேட்ட - உங்கள்
ஏவறைச் சத்தம்!
இன்னும்தான் நினைக்கின்றேன் எப்படிச் சாத்தியம்?
புதிய அனுபவமொன்றை - என்னுள்
பூக்கவைத்த அம்மாவே!
மரணம் இயற்கையென மனதைநான் தேற்றுகிறேன்.
என்றோ ஒருநாள் என்னையும் தேடி
இயமன் வருவான்.
அப்பொழுது அம்மா!
ஓடிவருவேன்!
உங்கள் அருகில் துயில் கொள.

- மூத்தமகன் -
14.12.2003



21.11.1917 - 14.11.2003

எந்தை இறந்தார் இளவயதில்
என்னை வளர்த்து ஆளாக்கத்
தந்து தன்னை உயிர்நீத்த
'தம்பியப்பா கனகம்மா'
எந்தாய் இவரின் மலரடியில்
இந்நூல் எனது சமர்ப்பணமே.

- செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் -
14.11.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைப்பு

கவிஞர் நீலாவணன் மட்டக்களப்பு மண்ணின் வாழ்க்கையை இலக்கியமாக்க எத்தனித்தார். அதன் விளைவே அன்னாரின் **'வேளாண்மை'**க் காவியம். ஈழத்தமிழ் பிரதேசங்களில் தனித்துவம் வாய்ந்ததான மட்டக்களப்பு மாநிலத்தின் (இங்கு மட்டக்களப்பு மாநிலம் என்பது வடக்கே வெருகல் ஆற்றையும், தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே ஊவா மலைக் குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும்) பாரம்பரியங்களையும், அம்மக்களின் வஞ்சக மில்லா வாழ்க்கை முறைகளையும் வைத்துக் காவியம் ஒன்றினை வடிப்பதற்காகவே நீலாவணன் **'வேளாண்மை'**யை விதைத்தார். ஆனால் **'வேளாண்மை'**க் காவியத்தை நிறைவுசெய்து அதன் முற்றிய முழு விளைச்சலையும் காணுமுன்பே 'கதிர்'ப் பருவத்திலேயே அவரின் உயிரைக் காலன் கவர்ந்துவிட்டான்.

**'வேளாண்மை'**க் காவியத்தின் 'குடலை', 'கதிர்' ஆகிய இரு பகுதி களையே அவர் எழுதி முடித்திருந்தார். அவையும் கூட கையெழுத்துப் பிரதியாகவே அவர் வீட்டில் கிடந்தது. கவிஞர் நீலாவணன் 11.02.1975 அன்று காலமானார். 1980 காலப்பகுதியில் ஈழத்தின் முதுபெரும் பிரபல எழுத்தாளர் காலஞ் சென்ற வ.அ. இராசரெத்தினம் அவர்கள் கல்முனைப் பிரதேசத்திற்குச் சென்றிருந்த போது கவிஞர் மு. சடாட்சரன் அவர்கள் கவிஞர் நீலாவணன் எழுதி முற்றுப் பெறாத **'வேளாண்மை'** எனும் காவியத்தின் கையெழுத்துப் பிரதியை கவிஞர் நீலாவணனின் மனைவியிடமிருந்து பெற்று அவரிடம் படிக்கக் கொடுத்தார். அப்போது வ.அ. அவர்கள் மூதூரிலே சிறு அச்சுச்கூடம் ஒன்றிற்குச் சொந்தக்காரனாக இருந்தார். அதனால் **'வேளாண்மை'** (குறுங்காவியம்) எனும் நூலின் முதற்பதிப்பு 1982 செப்டம்பரில் தங்கம் வெளியீடாக (தங்கம் வெளியீடு, திரிகூடம், மூதூர்) வெளிவந்தது. நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள வ.அ. இராசரெத்தினம் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

''இக்காவியத்தின் மூலம் இயந்திர நாகரீகத்தாற் கற்பழிந்து விடாத மட்டக்களப்பின் குமரியழகையும், மட்டக்களப்பாரின் விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் வெளியுலகிற்குக் காட்டத்தான் நீலாவணன் ஆசைப்பட்டிருக்கிறார் எனத் துலாம்பரமாகிறது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தான் ஆசை பற்றி அறைய வந்ததை நீலாவணன் கம்பகாம்பீர் யத்தோடு விருத்தப்பாக்களாற் பாடியிருக்கிறார். மட்டக்களப்பின் பழகு தமிழ்ச் சொற்கள் அவரின் கவிதா காம்பீர்யத்திற்குக் கைகட்டிச் சேவகம் புரிந்து இலக்கிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. ஏடறியாப் பெண்களும் கவி இசைக்கும் தெற்கு மட்டக்களப்பின் கவிவளம் இக்காவியத்தின் இலக்கணக் கரைகளுக்குளடங்கிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியாகப் பாய்கிறது.''

''நூறு நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் நம் சந்ததியினர் மட்டக்களப்பைத் தரிசிக்குமாறும் அழகான காவியத்தைத் தந்திருக்கிறார் கவிஞர் நீலாவணன்.''

* * * * *

06.07.1998 முதல் 12.07.1998 வரை கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடாத்திய 'ஈழத்துக்கவிஞர் வாரம்' நிகழ்ச்சியின் கீழ் நாளொரு கவிஞரைப் பாராட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. முதல் நாள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர், இரண்டாம் நாள் சோ. நடராசா, மூன்றாம் நாள் ஆ.மு. ஷரிபுத்தீன், நான்காம் நாள் கவிஞர் மஹாகவி, ஐந்தாம் நாள் கவிஞர் சில்லையூர் செல்வராசன், ஆறாம் நாளன்று (11.07.1998) கவிஞர் நீலாவணன் ஆகியோரின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. கவிஞர் நீலாவணன் பற்றிய சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தும் வாய்ப்பைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனக்கு வழங்கியிருந்தது. அதனால் ஏற்கெனவே பலமுறை படித்துச் சுவைத்த நீலாவணனின் **'வேளாண்மை'**க் காவியத்தை மீண்டுமொருமுறை நான் படிக்க நேர்ந்தது. அன்று நான் நீலாவணன் பற்றி நிகழ்த்திய சுமார் ஒன்றேகால் மணிநேரச் சொற்பொழிவு அனைவராலும் பாராட்டப் பெற்றதுடன் நீலாவணன் பற்றிய முழு வாசிப்புக்கான அருட்டுணர்வையும் அவையில் ஏற்படுத்தியிருந்தது என்பது மிகைப்பட்ட கூற்றல்ல. மேலும், 05.05.2000 இல் ஆரம்பித்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி.ப 5.30க்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்று வந்த 'நூல்நயம் காண்போம்' நிகழ்ச்சித் தொடரின் 34வது நிகழ்வில்(24.01.2001) நீலாவணனின் **'வேளாண்மை'க்** காவியத்தை நான் நயம் கண்டேன். என்னுடைய நூல் நயத்தால் மிகவும் கவரப்பெற்ற எனது நண்பரும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர், செயலாளரும், தேசிய கலை இலக்கியப் பேரவையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவருமான சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்கள் நூல்நயம் காண்போம் நிகழ்ச்சியின் பின்பு என்னைச் சந்தித்து நீலாவணனின் **'வேளாண்மைக்'** காவியத்தைத் தொடர்ந்து எழுதும்படி அன்போடு கேட்டுக் கொண்டார். நீலாவணனின் கவிதையோட்டத்தோடு இயைந்து எப்படி அக்காவியத்தைத் தொடர்ந்து எழுதுவது என்று உள்மனம் உறுத்திய போதிலும் நீலாவணன் மீது எனக்கிருந்த பிடிப்பின் காரணமாகவும் மட்டக்களப்பு மாநிலம் மீது எனக்கிருந்த வற்றாத வாஞ்சையினாலும் அவரது வேண்டுகோளுக்கு இசைந்தேன். இதனைப் பின் நான் நீலா வணனின் மகன் எழில்வேந்தனிடம் தெரிவித்தபோது அவரும் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் பல ஆலோசனைகளும் வழங்கி என்னை எழுதும்படி உற்சாகப்படுத்தினார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் இலக்கியச் செயலாளர், துணைத் தலைவர், செயலாளருமான நண்பர் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனும் என்னை எழுதும்படி அடிக்கடி தூண்டிக் கொண்டிருந்தார்.

இத்தகையதோர் பின்புலத்திலேயே கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சியை **'விளைச்சல்'** என்ற பெயரில் எழுதத்துணிந்தேன்.

* * * * *

'வேளாண்மை'க் காவியம் 'குடலை', 'கதிர்' என இரு பகுதிகளைக் கொண்டது.

# 1. குடலை

வயலுக்குச் செல்ல ஆயத்தமாகும் கந்தப்போடிக்கு மனைவி பொன்னம்மா உணவு பரிமாறும் சம்பவத்துடன் காவியம்(முதற்பகுதி - குடலை) தொடங்குகிறது.

*"ஆரங்கே? பொன்னம்மா உன்*
*அடுப்படி அலுவல் ஆச்சா*
*நேரமும் கடந்து போச்சே!*
*நீ என்ன செய்கின்றாய்? போய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோறெடு. சிவ சிவா... ஏய்*
*சுரைக்காயை என்ன செய்தாய்?"*
*நீறினை நெற்றியிட்டு*
*நெஞ்சினை வயலில் விட்டு*
*சோறொடும் மீனைப்பிட்டுச்*
*சுவைக்கின்றார் கந்தப்போடி.*

மகன் செல்லன் வயலிலே நிற்கிறான். பொன்னம்மா, கணவன் கந்தப் போடிக்கு உணவு பரிமாறுகிறாள். பொன்னம்மாவின் அண்ணன் அழகிப் போடியின் மனைவி கனகம்மா கந்தப்போடியின் தங்கை. அழகிப்போடி கனகம்மா தம்பதிகளின் மகள்தான் அன்னம்மா. அன்னம்மா சமைந்த சேதியை உணவு பரிமாறும்போது பொன்னம்மா கணவன் கந்தப்போடிக்குச் சொல்லுகிறாள்.

*"அண்ணனின் இளையபெட்டை*
*அன்னம்மா சமைந்ததாக*
*வண்ணார வயிரன் பொண்டில்*
*வழியிலே சொன்னாள்" என்று*
*பொன்னம்மா சொல்ல கந்தப்*
*போடியார் "விசளமேதும்*
*கொண்ணன் வீட்டார் களிங்கு*
*கொண்டு வந்தாரோ?" என்றார்.*

*"வயல்வழக் காடித்தோற்ற*
*வயிரம்போல் அவர்க்கு நம்மேல்*
*அயலெல்லாம் சொல்லிப்போனார்*
*ஆயினும் இங்கேயொன்றும்*
*வியளங்கள் இல்லை" - என்றாள்*

*"வேறென்ன செய்வார் நம்மை?*
*பயறிலே கல்லாய்ப்போனோம்"*
*பதறினார் கந்தப்போடி.*

கந்தப்போடி குடும்பத்துக்கும் அழகிப்போடி குடும்பத்துக்கும் இடையே வயல் தகராறு வழக்கு ஒன்றின் காரணமாக உறவு விரிசல் கண்டிருந்தது. அண்ணன் அழகிப் போடியின் மகள் சமைந்த சேதியைப் பொன்னம்மா கேள்விப்பட்டிருந்தாள். ஆனாலும் உரித்துக்காரர் எவரும் வந்த விசளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லவில்லையே என்று விசனமடைந்திருந்தாள். இந்த நிலையில் "விசளமேதும் கொண்ணன் வீட்டார்களிங்கு கொண்டு வந்தாரோ" என்ற கந்தப்போடியின் கேள்விக்கு "இல்லை" என்று பொன்னம்மா கூறக் கந்தப்போடி கோபம் கொள்கின்றார்.

*"அன்னம்மா அழகிதான் இங்*
*கார்வந்து முடிப்பான் பார்ப்போம்*
*பொன்னம்மா மறுகால் கொண்ணன்*
*பொடியனைக் கேட்டு கீட்டு*
*என்வீட்டுப்படியில் வந்து*
*ஏறட்டும்! எளிய நாய்கள்!"*
*சன்னதம் எழுந்தாற் போல*
*கறுவினார் கந்தப்போடி*

கணவன் கந்தப்போடியைச் சமாதானப்படுத்தி வயலுக்கு வழியனுப்பி வைக்கின்றாள் பொன்னம்மா. வயலிலே காத்திருக்கும் மகன் செல்லனுக்குச் சாப்பாடும் எடுத்துக் கொண்டு இரவு சூடடிப்பதற்கான ஆயத்தங்களுடனும் வயலை நோக்கி வண்டியில் புறப்பட்டுச் செல்கின்றார் கந்தப்போடி. சண்டியன் சாமித்தம்பி வண்டியை ஓட்டிச் செல்கின்றான். வண்டி புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தால் கனகம்மா நீண்ட நாட்களுக்குப் பின் கூடப் பிறந்த அண்ணன் கந்தப் போடியின் விட்டிற்கு வந்து மச்சாள் பொன்னம்மாவிடம் தனது மகள் அன்னம்மா சமைந்த சேதியை முறைப்படி சொல்லிச் செல்கின்றாள். வண்டியும் வயலை அடைகின்றது.

*மாட்டினை உருவிக் கொண்டு*
*மடுவில் நீர் காட்டி வைக்கோல்*
*போட்டபின் கணுவில் கட்டி*
*புகையிலை கிள்ளிப் பல்லைத்*
*தீட்டிஉள் திணித்த சாமி*
*செல்லனை பார்த்துத் தம்பி*
*கேட்டியா சேதி உன்றன்*
*கிளியல்லோ சமைந்ததென்றான்.*

வயலுக்குப் புறப்பட்டு வந்த பின் ஊரில் நடந்தது கந்தப்போடிக்குத் தெரியாது. அதாவது கனகம்மா கந்தப்போடி வீட்டுக்கு வந்து மனைவி பொன்னம்மாவிடம் அன்னம்மா சமைந்த சேதியை முறைப்படி சொல்லிச் சென்றது தெரியாது. அதனால் அவரது கோபம் ஆற வாய்ப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆரைடா சாமி நீ போய்
அவனது கிளியாள் என்றாய்
பேரையே மாற்றி வைப்பேன்
பெருங்கொலை நடக்கும். இந்த
ஊரெல்லாம் சொன்னார் நானும்
ஒருவனிங்கிருந்தேன்” என்று
பீரங்கிக் கந்தப்போடி
பெருங்குரலெடுத்துச் சொன்னார்.

“வலிய வந்தெனக்கு மாறாய்
வழக்காடித் தோற்ற கோபம்
அழகிப்போடிக்கும் பொண்டில்
அவளுக்கும்! பழி யார்மேலே?
எழியவன் எனக்குச் சொன்னால்
என்னவாம்! செல்லனுக்கு
கலியாணம் பாண்டியூரில்
கணபதிப்போடி வீட்டில்
செய்யாது போனால் என்னைச்
செருப்படித்தடிடாசாமி
பொய்யில்லை....”

என்று கந்தப்போடி பொருமுகிறார். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான் செல்லன் வீட்டிலிருந்து வந்த சாப்பாட்டை உண்ண ஆயத்தமாகின்றான்.

அப்பனின் கோபம் வீட்டில்
அம்மைக்கும் அடியோ? செல்லன்
இப்படி நினைத்துக் கொண்டு
எழுந்து போய்க் குடிலுக்குள்ளே
செப்புச் சட்டிக்குட் சோற்றைத்
திறந்ததும் தயிர்ச் சட்டிக்குள்
எப்படி மச்சான் என்றே
இளித்தனள் அன்னம் நின்று.

அன்னத்தின் பழைய நினைவுகளை மீட்டியபடி செல்லன் உணவை உண்ணுகிறான். காவியத்தின் நிகழ்வுகளாகச் சூடடிக்கப்பட்டு களம் பொலிகிறது. மொத்தம் எண்பத்தைந்து அவணம். கணக்குத் தீர்த்தல் - கள வெட்டிப் பொங்கல் எல்லாம் முடித்து நெல்மூட்டைகளை ஏற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சண்டியன் சாமியும் செல்லனும் ஊருக்குப் புறப்படுகின்றனர். வழியில் சண்டியன்சாமி தான் தன் மனைவி கற்பகத்தை வசியம் பண்ணிக் கலியாணம் முடித்த கதையைச் செல்லனிடம் கூறி,

*"அப்பனை விடு செல்லா நீ*
*ஆண்பிள்ளை அன்னம் மட்டும்*
*ஒப்புதல் தந்தால்போதும்*
*ஊரெல்லாம் எதிர்த்து வந்து*
*தப்புத்தண்டா செய்தாலும்*
*தகர்த்துங்கள் கலியாணத்தைச்*
*செப்பமாய் முடிப்பேன் ...."*

என்கிறான். வண்டி ஊரை அடைகிறது. தாய் பொன்னம்மா மகன் செல்லனுக்கு உணவு பரிமாறிக் கொண்டே,

*"அன்னம்மா சமைந்த சேதி*
*அப்பன் சொன்னாரா தம்பி"*

என்று கேட்கிறாள். கந்தப்போடி வயலில் ஏசிய கதையைச் செல்லன் சொல்ல, மாமி கனகம்மா நேரில் வந்து செய்தி சொன்னதைப் பொன்னம்மா சொல்கிறாள். செல்லன் சந்தோஷப்படுகிறான். செல்லன் சாப்பிட்ட பின் வடிவேலைப் பார்க்கும் சாட்டில் அன்னத்தை பார்ப்பதற்காகச் செல்கின்றான். ஆனால் அங்கு அன்னத்தைச் சந்திக்க முடியவில்லை. வடிவேல் அன்னத்தின் அக்காவின் கணவன்.

அன்னத்தின் பெத்தா பார்வதி

'வைக்கலில் விளைந்த நெல்லை / வைக்கலில் வைத்துக் கட்டி / இக்குலம் தழைக்க வைத்தல் / எல்லோர்க்கும் கடமை' என்றெண்ணி தனது மகளின் மகளான அன்னத்தை முறை மச்சான் செல்லனுக்குக் (மகனின் மகன்) கட்டி வைக்கவே எண்ணிச் செயல்படுகின்றாள்.

*வடிவேலின் சாட்டில் அன்னம்*
*வடிவினை மறைந்து காண*
*முடியாது போன தெண்ணி*
*முணுமுணுக்கின்ற செல்லன்*
*அடிமனம் போலக் கூத்து*
*மத்தளம் அலறக் கோயி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லடியிலே சிறிது குந்தி*
*கூத்துப் பார்த்திருந்தான் செல்லன்.*

இந்த நிகழ்வுடன் காவியத்தின் 'குடலை' முடிந்து அடுத்த பகுதியான 'கதிர்' ஆரம்பமாகிறது.

# 2. கதிர்

அன்னத்திற்குச் சமைந்த தண்ணீர் வார்க்கும் நிகழ்வுடன் இரண்டாவது பகுதியான 'கதிர்' தொடங்குகிறது.

*"பங்குனிக்குப் பதினேழு*
*புதன்கிழமை பகல் நேரம்*
*பரணிசேர்ந்த*
*மங்கல சீர் முகூர்த்தத்தில்*
*மகள் அன்னம் சமைந்த தண்ணீர்*
*வார்ப்பதாக*
*எங்களது பெரியோர் செய்*
*தீர்மானம் என்றூரின்*
*எல்லாவீடும்*
*சங்கை செய்து கனகம்மா*
*வெளியிட்ட தாம்பூல*
*வட்டா தந்தாள்..."*

பின் ஊரில் அன்னம் சமைந்த தண்ணீர் வார்ப்பு, பெண்களின் குரவை - வெடிக்கொளுத்து - ஆலாத்தி - மஞ்சள் குளிப்பு இத்தனை அலங்காரங் களுடன் நடைபெற்று முடிகிறது.

பிரிந்திருந்த கந்தப்போடி - பொன்னம்மா குடும்பமும், அழகிப்போடி - கனகம்மா குடும்பமும் மீண்டும் உறவாடும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

ஊரில் சித்திரை வருடப் பிறப்புக் கொண்டாட்டம் - தொடர்ந்து கோயில் தேர் - கோயில் முற்றத்திலே கூத்து எனக் காவியம் தொடர்கிறது.

அன்னம்மா செல்லனின் நினைவுகளுடன் வீட்டிலிருந்து கூத்துப் பாடல்களை இரவு விழித்திருந்து கேட்டவாறே உறங்கிப் போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லன் அன்னத்தின் நினைவுகளுடன் வடிவேல், சாமித்தம்பி சகிதம் வந்திருந்து கூத்துப் பார்க்கிறான். கந்தப்போடி, அழகிப்போடி ஆகியோரும் அருகிலிருந்து கூத்துப் பார்க்கிறார்கள்.

*களரியின் அருகில் செல்லன்*
*கலியாணப் பேச்சு வார்த்தை*
*கிழவனைப் பாரேன்! என்று*
*கிள்ளினான் வடிவேல்! சாமி*
*களவாக எட்டிப் பார்த்தான்!*
*கந்தப்பர்- அழகப்போடி*
*தலையினை அசைத்து தாளம்*
*தகர்ப்பதும் கண்டான் செல்லன்.*

இத்துடன் 'கதிர்'ப்பகுதியும் நிறைவுறுகிறது. ஆனால் காவியம் முற்றுப் பெறவில்லை. நீலாவணனின் மறைவு அதற்குக் காரணம். செங்கதிரோன் எழுதிய **'விளைச்சல்'** ('வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி) குறுங்காவியத்தின் ஒரு பகுதி கொழும்புத் தமிழ்ச்சங்க மாதாந்த வெளியீடான 'ஓலை' சஞ்சிகையில், ஓலை -12 ஜனவரி 2002 தொடக்கம் ஓலை 33-34 ஆனி, ஆடி மாதம் 2006 வரையிலான காலத்தில் வெளிவந்தது. ஆனால் முற்றுப்பெறவில்லை. 'ஓலை'யின் ஒழுங்கான வரவின்மை இதற்குக் காரணம். பின் 30.01.2008 இருந்து மட்டக்களப்பில் 'செங்கதிர்' சஞ்சிகை தோற்றம் பெற்று மாதா மாதம் வெளிவரத் தொடங்கியதும் 'செங்கதிர்' வாசகர்களின் வசதி கருதி முன்பு 'ஓலை' இதழ்களில் வெளிவந்த 'விளைச்சல்' காவியப் பகுதிகளையும் உள்ளடக்கி செங்கதிரில் மீள் பிரசுரம் செய்து (பெப்ரவரி 2008 இருந்து ஆரம்பித்து ஆகஸ்ட் 2010 இல் முற்றுப்பெற்றது.) இன்று நூலாக உங்கள் கையில் பொலிகிறது.

- செங்கதிரோன் -

'வேளாண்மை'க் காவியம் (1) 'குடலை' (2) 'கதிர்' என இரு பகுதிகளைக் கொண்டது. அதன் தொடர்ச்சியான 'விளைச்சல்' காவியம் (3) 'காய்' (4) 'பழம்' எனத் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. காய்

**பார்வதிப் பெத்தாவின் ஆசை**

அன்னம்மா சமைந்து நாள்கள்
ஆண்டுகள் ஆகியோட
எண்ணமே செல்லன் ஆகி
ஏங்கினாள். ஓர்நாள் பெத்தா
''என்னடீ..! கனகம் மாவுன்
இளையவள் கலியாணத்தை(க்)
கண்ணை நான் மூடு முன்னம்
காணத்தான் ஆசை" என்றாள்.

"அண்ணன்ட மகன்தான் செல்லன்
ஆனாலும் அவன் என்னத்த
எண்ணித்தான் இருக்கிறானோ?
ஏனென்டா ... பாண்டியூரார்
பெண்ணுக்குப் கேட்டுப் போகப்
போறாராம்?" - கனகம் கூற
பார்வதிப் பெத்தா சொன்னாள்.,

"பொன்னுவக் கேட்டுப் பார்த்தன்
பொடியனும் சம்மதந் தான்
கொண்ணன்தான் வந்து கேட்டா
கொடுக்காம விடுவனா நான்..
சொன்னானாம் கந்தப்போடி
சொந்தத்த விடுவானா ... பார்!
விண்ணாலக் கதய உட்டு
விசயத்தப் பாரு புள்ள"

**அழகிப்போடியின் பதில்**

அம்மையும் மகளும் பேச
அழகியும் காதில் கேட்டு
"சும்மாநாம் போகலாமா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டையும் அடிக்க வேணும்!
இம்மாதம் முடிந்த பின்னர்
இருத்தையும் கழியுட் டுங்கா!
சம்மதம் கேட்டுப் போவம்...
சரிதானே ...! கனகம்" என்றார்.

**அன்னம்மாவின் ஆனந்தம்**

அடுப்படிப்பக்கம் நின்றே
அப்பனின் பதிலைக்கேட்டு
கொடுப்புக்குள் சிரித்த வண்ணம்
குதூகலித்திருந்த அன்னம்
துடுப்புக்கள் வலிக்கப்பாயும்
தோணிபோல் ஓடிக் கட்டில்
நடுப்புறம் வீழந்தாள். போன
நாளெல்லாம் நினைவில் மீளும்!

**அன்னம்மா முறை மச்சான் செல்லனுடனான தன் பழைய நினைவுகளை மீட்டுகிறாள்**

கல்முனைப் பள்ளி செல்லக்
காத்தவள் நின்றபோது
மெல்லிசாய் 'அன்னம்..' என்று
மிதி வண்டி மீதில் வந்து
சொல்லியே அழைத்து அன்று
சொந்தத்தைத் தூக்கி வைத்த
செல்லனை எண்ணிப்பார்த்தாள்.
சிறுநகை இதழ்கள் சிந்தும் !

"கத்தரிக்காயை ஆயக்
காலைக்குள் நின்ற வேளை
எத்தனை தரம்தான் அந்த
இடத்திற்கு வந்து போனாய்..?
சத்தியம் அத்தான்! உன்னைச்
சந்திக்க ஆசை. ஆனால்...
உத்தமம் இல்லை - நாளை
ஊர் வாயை மூடலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக்குள் மறைப்பில் நின்று
மறுகுவாய் ஒழுங்கைக்குள்ளே!
காலைக்குள் கையைக் காட்டிக்
காண்பித்து வா! வா! என்பாய்!
நாளைக்கு வாவன் என்று
நாளும்தான் அனுப்பி வைத்து
தாலிக்கு நாளைப் பார்த்து
தவித்தாளே! இந்த அன்னம்.

ஊர் எல்லாம் உறங்கும் நேரம்
உனைக்கானவென்றே ஓர் நாள்
பார்வதிப் பெத்தாவோடு
* 'பள்ளயம்'பார்க்கப்போன
நேரத்தில் நீயும் அத்தான்!
நிழல்போலப் பின்னே வந்தாய்!
ஊர்வம்பு சொல்லுமென்றே
உன்னோடு பேசவில்லை"

பின்னாலே செல்லன் வந்து
பேசாமல் கையைப் பற்ற
"என்னத்தான்" என்றாள் அன்னம்.
"இஞ்சபார்!" என்று சொல்லி
அன்னத்தின் கையைப் பொத்தி
அமுக்கினான் காப்புச்சோடி.
அந்நாளை எண்ணி நெஞ்சில்
அன்னம்மா ஆனந்தித்தாள்.

* பாண்டிருப்பு (கல்முனை) திரௌபதை அம்மன் கோயில் வருடாந்த (தீ மிதிப்பு) உற்சவம் தீப்பள்ளயம் என அழைக்கப்படும்.

**செல்லையாவை அன்னத்திற்குக் கேட்டுப் போகிறார்கள்**

"செல்லனுக்கென்றே அன்னம்
சின்னனி லிருந்தென் எண்ணம்!"
சொல்லுவாள் பெத்தாசொல்லி(ச்)
சொந்தத்தைச் சேர்த்து வைப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லமாய் கனகம் காதில்
மென்மேலும் ஓதி ஓதி
செல்லனைக் கேட்டுப் போகச்
சிரத்தையாய் நின்று வென்றாள்.

**செ**ழிப்புடன் சேமம் எங்கும்
சேர்ந்ததோர் சிறந்த நாளில்
'கொழுக்கட்டை' கொண்டு போக
கூப்பிட்ட சுற்றம் சூழ
குளக்கட்டுக் கோயில் சென்று
கும்பிட்டு வந்த பின்னர்
வெளிக்கிட்டார் கந்தப்போடி
வீட்டுக்கு அழகிப் போடி.

**கொ**ல்லையில் நின்ற கன்றுக்
குட்டியொன் றோடி வந்து
செல்லனின் வீட்டுத் திக்கில்
சென்றது. அழகிப்போடி
"வில்லங்கம் இல்லை" என்றார்.
வீதியை எட்டிப் பார்த்து
"நல்லது முழிவியள்ளம்
நடவுங்கள்" என்று சொல்ல

**வெ**ற்றிலைப்பகளி, பாக்கு
வெண்கல வட்டா வொன்றில்
முற்றிய 'கோழிச்சூடன்' (கோழிச்சூடன் வாழைப்பழம்)
முழுச்சீப்பு உள்ளே எல்லாம்
ஒற்றைப்பட வைத்து மேலும்
ஒரு துண்டு மஞ்சள், தேசி
சுற்றியே வெள்ளைச் சீலை
சுமக்கின்றாள் கனகம் முன்னால்

**கொ**ழுக்கட்டைப் பெட்டி பின்னால்
குலையோடு 'கோழிச் சூடன்',
முழக்கட்டை போல வெள்ளை
மொந்தனும், தயிரும் காவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழக்கத்தில் உள்ள நல்ல
புழுங்கலும் தேங்காய் வேறு.
வழக்கம் போல் ஊரார் நின்று
வழியிலே புதினம் பார்த்தார்.

**பெண்வீட்டாரை மாப்பிள்ளை வீட்டார் வரவேற்றல்**

வட்டாவைக் கனகம் நீட்ட
"வாகா! வா....! மச்சாள்!" என்று
தட்டோடு பொன்னு வாங்க
தயாராகி நின்ற மற்ற
கிட்டடிச் சொந்தக் காரர்
கிரமமாய் முன்னே வந்து
பெட்டிகள் பெற்றுப் போனார்.
பிறகென்ன பேச்சுத்தானே!

வாசலில் வந்து நின்று
"வா! மச்சான்....!" என்று கந்தர்
பேசத்தான் முயன்றார். அன்புப்
பெருக்கில் நா எழவேயில்லை.
பாசத்தால் கையைப் பற்றிப்
பாயின்மேல் அமரச் செய்து
நேசத்தால் நெஞ்ச மெல்லாம்
நெய்யைப்போல் உருக நின்றார்.

பிரிந்தவர் கூடி நின்றால்
பேசவும் வேண்டுமாமோ?
இருந்தனர் அழகர், கந்தர்
இருவரும் அருகில் கண்டோர்
"விருந்தெலாம் எமக்கு இன்று
விமரிசையாய் இருக்கும்" என்று
புரிந்தனர் சைகை தம்முள்;
பூரித்துப் போனார் கந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணப் பேச்சுவார்த்தை சுபமாக முடிந்தது.

"விருப்பத்தைச் சொல்லு மச்சான்!
வேண்டியதெல்லாம் கேளு!
மருக்கொழுந் தல்லோ அன்னம்
மடிக்குள்ளே வைத்து நாங்கள்
பொருப்பத்தி வளர்த்த பெட்டை
பொல்லாப்பு வேணாம் பின்னர்"
சுருக்கவிழ்த் தழகிப் போடி
சுணங்காமல் பேச்செடுத்தார்.

'உள்ளதோ இன்னும் என்ன
ஒரு பெட்டைக் குஞ்சு தானே!
புள்ளயின் பேரில் தோட்டம்,
புதுவீடு, வளவும் உண்டு;
'பள்ளவெளி'க் காணி மொத்தம் (பள்ளவெளி - வயற் காணியின் இடப்பெயர்)
பத்தேகால் ஏக்கர் தேறும்;
உள்ளது முழுதும் அன்னம்
ஒருத்திக்குத் தானே!" என்றார்.

"சொல்லயா வேணும் அண்ணா!
சொந்தத்துக் குள்ள... எங்கள்
செல்லனும் செல்லப்பிள்ள.
சித்திரை கழியச் செய்வம்;
செல்லனுக் கென்றே அன்னம்
சிலையின்மேல் எழுத்துப்போல;
பொல்லாப்பு ஒண்டும் இல்ல"
பொன்னம்மா விடை பகர்ந்தாள்.

"என்னெண்ணம் வேறா என்ன?
இளசுகள் வாழவேணும்!
சொன்னாத்தான் கொடுப்பாயா? நீ
சும்மாதான் விடவா போறாய்!
என்னால ஏண்ட தையும்
என்மகனுக் கெழுதி வைப்பன்"
சொன்னாரே கந்தப்போடி
சுபமாக முடித்தும் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அன்னம் – செல்லன் கல்யாணப் பேச்சுவார்த்தை சுபமாக முடிந்த சந்தோஷம்)

கல்யாணப் பேச்சுவார்த்தை
கரைச்சல்கள் ஏதுமின்றி(ச்)
சொல்லியே வைத்தாற்போல
சுபமாக முடியக்கண்டு
எல்லோரும் நெஞ்சமெலாம்
இன்புற்றார்; தம்முள் "ஒண்டும்
இல்லையா?...." என்று பேச
"ஏன் இல்லை" என்றார் கந்தர்.

முந்தியொரு முக்காலில் போய்
முசுப்பாத்தி பண்ணிவிட்டு
வந்திருந்தான் 'வகிறன்'
வன்னமணி எழும்பிநின்று
"சொந்தமினித் தொடரட்டும்
சோறெடுங்க" என்று சொல்ல
வந்திருந்தோ ரெல்லோரும்
வாய்விட்டுச் சிரித்தார்கள்.

கந்தப்பர் மற்றலுவல்
கவனிக்க வென்றெழுந்தார்.
குந்தியிருந்த பெண்கள்
கும்மாளச் சிரிப்பும் பேச்சும்.
பந்தியினை வைப்பதற்குப்
பாயெடுத்தும் போட்டார்கள்.
சந்தைக்குப் போயிருந்த
சாமியும்தான் வந்துவிட்டான்.

மாப்பிள்ளை செல்ல னோடு
மகிழ்ச்சியில் நின்ற சாமி
கூப்பிட்ட சத்தம் கேட்டுக்
குதித்தோடி வந்தான்; கந்தர்
ஏற்பாட்டைப் பாரென் றோத
ஏகினான்; உள்ளே 'லிக்கர்
'ஷாப்' பினில் வாங்கி வந்த
சரக்கொன்றைத் தூக்கி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடுமச்சான்" என்றார் கந்தர்
இறைச்சி வந்திறங்கிற்றங்கே.
"குடுமச்சான் உன் கிளாசை"
குஷி வந்து அழகர் கூற,
கொடுவா மீன் பொரியல் கோப்பை
கொண்டங்கே வைத்துப் போத்தல்
குடுதியைத் திருகிச் சாமி
"கொண்டாட்டம்தானே" என்றான்.

"குறையொன்றும் இல்லை. எங்கள்
குலம் தழைக்க வேணும் மச்சான்!"
அரைவெறியில் அழகர் சொல்ல,
"அதுதானே!" என்ற சாமி
அறையொன்றுள் போய் அளவாய்
அனுக்கினான்; சற்றுப் பின்னர்,
மறைவாக மற்றொன்றைத் தன்
மடிக்குள்ளே கட்டி வந்தான்.

"எடுமச்சான்! இன்னொன்" றென்று
எடுத்தங்கே கந்தர்வைக்க,
குடி ஆட்டம் தொடங்கிற்றங்கே.
குசினிக்குள் நின்ற பொன்னு
"அடிமச்சாள்! கனகம் வா! வா!
ஆட்டத்தைப் பார்! பார்!" என்றாள்.
மடியவிழ்ந்து வேட்டி வீழ
மாணிக்கம் ஆடுகின்றான்.

தொந்தி வயிறுடையான்
துரைசிங்கம் அண்ணாவி
குந்தி யெழும்பி நன்றாய்க்
கொடுக்கிறுக்கிக் கட்டியபின்
"தந்தனத்தா" என்று சொல்லித்
தம்பண்ணன் பாட்டெடுக்க
'குந்தி வருகை' யினைக்
கூத்தாடிக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேலும் விடுவானா போய்
வார்த்துவிட்டு வந்து நின்றான்.
'அடி சக்கை' அமர்க்களந்தான்
அவனும்தான் ஆடுகின்றான்!
"விடுமச்சான்!.. போதும் இனி...
விடு" - அழகர் வேண்டியதால்
விடுபட்டார் கந்தர் பின்
வீட்டுக்குள் சென்று வந்தார்.

கைகழுவி வாய் அலம்ப
கந்தப்பர் செம்பு தந்து
பையவேதான் கூட்டிப்போய்
பந்தியிலும் இருப்பாட்டி
"ஏய்பொன்னு! கொண்ணன்கா!
இலைபோடு! எல்லாமே
வை நல்லா வை! வை! வை!
வடிவாகக் கவனி" என்றார்.

அண்ணனின் அருகில் மெல்ல
அமைதியாய் வந்த பொன்னு
"என்னண்ணா! இன்று நல்லா
எடுத்திட்டா போல" என்றாள்.
"கொண்ணனுக்கென்ன இன்று
"கொண்டாட்டம்தானே" என்று
கண்ணாலே கனகம் பேச
களிப்பிலே கந்தர் ஆழ்ந்தார்.

பந்தியில் மற்ற ஆண்கள்
பகிடிகள் கதைத்த வண்ணம்
குந்தினர். பெண்கள் ஓடி
குசினிக்குள் சோறு கொண்டு
வந்தனர். வடிவாய் எல்லாம்
வைத்தனர். வழமைபோல
பந்தியின் நடுவில் பெத்தா
பார்வதி வைத்தாள் சத்தம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோறெடுத்து வா ! சொர்ணம்!
சுண்டலையும் கொண்டு வாகா!
ஆறெடுகப்போனா பார்...!
ஆட்டிறைச்சிக் கறியை தண்
ணீர் எடுத்து வை வள்ளி!
நீளத்தில் பாயை விரி!
ஊர் கதைக்கப் போடாகா!
உண்டெனவே எல்லாம் வை"

'உப்' பென்று கேட்டார்கள்.
"உறைப்பெங்கே?" மற்றொருவர்
"சப்பித்தான் தின்னநல்ல
சதையோடு எலும்பிறைச்சி"
"தப்பாமல் தம்பிக்கு .. வா!
தயிர், சீனி போடு தங்கம்"
"அப்பாடா! நல்லவெட்டு.... ஆ!
ஆணத்தில் கொஞ்சம் ஊத்து"

ஆம்பிளைப் பந்தி வைத்து
அடங்கிய பின்னர் பொன்னு
செம்பினைக் கனகம் கையில்
சிறப்பாகத் தந்து மற்ற
பொம்பிளைத் தத்தியாரை(ப்)
பொறுப்பாக நின்று எந்த
வம்பேனும் வந்திடாத
வண்ணம் நல் பந்தி வைத்தாள்.

**சந்தோஷத்தில் சாமி கூச்சலிட்டான்**

பந்திவைத் தோய்ந்த பின்னர்
பார்வதிப் பெத்தா ஓடி
வந்தனள். வாய்க்குப் போட
வட்டாவைக் கொண்டு வைத்து
குந்தினள். பெண்கள் சுற்றிக்
கூடினர் கும்மாளம்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்குப்போன சாமி
சாராய வெறியில் மீண்டான்!

மாப்பிள்ளை செல்லன் வெட்கி
மாமர மறைவில் நிற்க
"ஏற்பாட்டைப் பண்ணுங்க போய்
இனியென்ன கலியாணம்தான்"
கூப்பாடு போட்டான் சாமி
குடிவெறியில் கூச்சலிட்டான்.
"காப்பாற்ற வேணுமிவனைக்
கடவுள்தான்" என்றார் கந்தர்.

**பெண் வீட்டார் விடைபெற்றார்கள்**

வாய்க்குந்தான் போட்டவாறே
வந்தவர் அழகிப்போடி
"போய்க்கொண்டு வாறம்" என்றார்.
"பொடிச்சியும் தனிய வீட்டில்
ஏய்! மச்சாள் வரட்டா நாங்கள்"
என்றுபின் கனகம் கூற
"ஓய்! இந்தா...! ஓடி வாறன்..!"
உமல் ஒன்றைப் பொன்னு தந்தாள்.

"என்னமச்சாள் இதுகள் எல்லாம்
இருக்கிற சோலிக்குள்ள...."
"அன்னத்திற் கென்று சொல்லி
ஆசையாய் மனதும் வைச்சு
பண்ணிய பணியாரம் கா...!
பையிலே பனம் கிழங்கும்...."
"என்ன ..இது.. மருமகளில்
இப்போதே..!" என்றார் கந்தர்.

கடப்படி வரைக்கும் வந்து
கந்தரும் பொன்னம்மாவும்
விடப்பிரிய மில்லாமல்தான்
விழியோரம் நீர் ததும்ப
"நடப்பெல்லாம் நல்லாகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்குங்கா!" பொன்னு சொல்ல
விடைப் பெற்றார். விருந்தினர்தம்
வீட்டுக்கு நடைபோட்டார்.

**மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீடு சென்று வந்தனர்**

நல்லொரு நாளில் பொன்னு
நாலயலார்க்கும் சொல்லி
பல்வகைப் பலகாரங்கள்
பண்ணி யதனோடு மற்ற
சொல்லிய யாவும் கொண்டு
சொந்தபந் தங்கள் சூழ
செல்லனின் வீட்டார் தாமும்
சென்று பெண் வீடு வந்தார்.

**பஞ்சாங்கம் பார்த்துக் கல்யாண நாள் குறிக்கப்பட்டது.**

பஞ்சாங்கம் பார்த்துப் பாணிக்
கிரகநாள் கோயில் ஐயர்
குஞ்சிதபாதம் சொல்ல
குறித்ததை வைத்துக் கொண்டு
எஞ்சிய நாட்களின்னும்
இருப்பது சிறிதேயென்று
துஞ்சினாள் கனகம் அல்லள்;
துரிதமாய் அலுவல் பார்த்தாள்.

**கல்யாண ஏற்பாடுகள்.**

வட்டில், சவரக்கால், படிக்கம்,
வட்டா, குடம், சருவச்
சட்டி, பன்னீர்ச்செம்பு,
தட்டம், தாம்பாளம், கிண்ணம்,
தளிசை, தண்ணீர்ச்செம்பு,
எட்டுக்கொள் கிடாரம் இன்னும்
ஏனங்கள் என்று நீளும்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை ஏனம் எல்லாம்
எலுமிச்சை, சாம்பல், தும்பால்
சுத்தமாய்க் கழுவி வீட்டுச்
சுவர் ஓரம் அடுக்கிக் கையால்
குத்திய அரிசி, மா, தூள்,
கோப்பி, தேன், பயறு, சீனி,
புத்தம் புதிய பாய்கள்
புளி, உப்புப்பொருட்கள் யாவும்

ஆடியும் கழிந்து போக
ஆவணி அடுத்த மாதம்
சோடியைச் சேர்த்துக் கன்னிச்
சுமையொன்றை இறக்கிவைக்க
ஓடித்தான் உருள நாட்கள்
ஊணின்றி உறக்கமின்றி
ஓடித்தான் கனகம் சேர்த்தாள்.
உதவினாள் பொன்னும் கூட.

வெள்ளையும் அடித்து வீட்டை
வேலியும் பிரித்துக் கட்டி
குள்ளமாய் இருந்த கொட்டுக்
கிணற்றையும் உயர்த்திச் சற்று
வெள்ளைவார் மணலும் ஏற்றி
வீட்டுமுற் றத்தில் கொட்டி
அள்ளியே இறைத்துக்காசை
அழகரும் அலுவல் பார்த்தார்.

கல்முனைக் கடைக்குச்சென்று
கல்யாண வேட்டி, கூறை
இல்லாத சாமான் வீட்டில்
எவையென்று எண்ணிப்பார்த்து
சொல்லாத படிக்கு ஊரார்
சொட்டைகள் ஏதும்பின்னால்
எல்லாமே வாங்கி வந்தார்.
எடுத்துள்ளே கனகம் வைத்தாள்.

இதுவரை: அன்னம்மா - செல்லையா கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்யாணத்திற்கு அழைப்பு

ஆடியும் கழிந்து மாதம்
ஆவணி ஆயிற் றூரில்
போடியார் கந்தர்- பொன்னு
புத்திரச் செல்வம் செல்லன்
ஈடிலார் அழகிப்போடி
எழில்மகள் அன்னம்மாவைச்
சோடியாய்ச் சேரும் நாளை
சொல்லினர் 'வட்டா' வைத்தே.

### கல்யாண நாளன்று மாப்பிளைத் தோழன் வந்து மாப்பிள்ளையைக் கூட்டிப்போதல்

கல்யாண நாளில் அன்று
காலையில் தோழன் வந்து
நெல்லினைக் குவித்த மேட்டில்
நிறைகுடம் வைத்த வீட்டில்
செல்லையா தலையில் பாலும்
சிறுகென அரைத்த மஞ்சள்
புல்லுமாம் அறுகும் தப்பிப்
புதுநீரில் முழுக வார்த்தார்.

மாப்பிள்ளை வேட்டி கட்டி
மாலையாய்ச் சால்வை இட்டு
கூப்பிட்ட சொந்தக் காரர்
கூறைகொள் பெட்டி ஏந்தி
ஊர்ப்பட்ட உரித்துக்காரர்
ஊர்வலமாகச் செல்ல
மாப்பிள்ளைத் தோழன் முன்னே
மச்சானைக் கூட்டிப்போனார்.

### பெண்ணின் வீட்டை அடைதல்

அன்னத்தின் வீட்டு வாசல்
அடைந்ததும் அங்கு நின்ற
பெண்ணெலாம் குரவை வைத்தார்.
பீரங்கி வெடியின் ஓசை !
முன்னாலே அழகிப் போடி
முகமெலாம் மலர நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமோ அறையின் உள்ளே
அணங்கென அழகுக் கோலம்.

நீள்முடித் தேங்காயோடு
நிறைகுடம் படியில் வைத்த
பால்நிறத் துணியை மேலே
பரப்பிய பலகை மீது
கால்களைத் தூக்கிச் செல்லன்
கவனமாய் ஏறி நிற்கும்
கோலத்தைக் கண்டு நெஞ்சில்
குதூகலம் கொண்டார் கந்தர்.

அன்னத்தைத் தேடிக் கண்கள்
அலையவே நின்ற செல்லன்
எண்ணத்தைப் புரிந்த பொன்னு
என்னவோ கனகம் காதில்
சொன்னதைக் கேட்ட பெத்தா
"சுறுக்கா.. கா!" என்று சொல்ல
புன்னைப்பூ சொரிந்தாற் போல
பொண்டுகள் முறுவல் பூத்தார்.

**அன்னத்தை அழைத்து வரல்**

அன்னத்தை அறைக்குள் சென்று
அவளுக்கு மச்சாள் ஆன
பொன்மணி கூட்டி வந்தாள்.
பூவொன்று நகர்ந்தாற்போல
கன்னத்தில் நாணம் ஏறிக்
கண்களோ பாதம் நோக்க
அன்னப்புள் நடையில் செல்லன்
அருகிலே வந்து நின்றாள்.

அன்னத்தின் அழகைக் கண்டு
ஆடித்தான் போனான் செல்லன்.
என்னத்தைச் சொல்ல இந்த
எழில்மிகு ஓவியத்தின்
கன்னத்தைக் கிள்ளி அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணமேதான் காதல் செய்ய
எண்ணினான்; இருந்தபோதும்
இருந்த இடம் இல்லைத் தோது.

**கைப்பிடித்து வைத்தல்**

கன்னியைத்தானம் செய்ய
காத்திருந் தழகிப்போடி
அன்னம்மா கையைப்பற்றி
அதைச் செல்லன் கையில் வைத்துப்
பின்னினார்; பிணைத்த பின்னர்
“பிள்ளைகள் வாழவேண்டும்”
கண்ணீரும் கசிந்து மல்கி
கடவுளை வேண்டிக் கொண்டார்.

**அன்னம்மா கூறை மாற்றப்போதல்**

“செல்லனைப் புருஷனாகச்
சேர்த்து நான் வைத்து ஓர்நாள்
வெல்லுவேன்” என்று பெத்தா
விளம்பிய தெண்ணி அன்னம்
மெல்லிய முறுவல் பூத்து
மெதுவாக நடந்து வீட்டுள்
செல்லையா கொணர்ந்த கூறைச்
சேலையை மாற்றப் போனாள்.

**அன்னம்மா கூறை மாற்றித் திரும்புதல்**

வெந்தழல் நிறத்தில் கூறை
வெள்ளியில் சரிகை மின்ன
சொந்தமச் சாள்கள் கேலி
சொல்லவும் வெட்கி அன்னம்
செந்தளிர் மாவிலைபோல்
சிவந்தனள் சிலையைப் போல;
வந்தனள் கூறை மாற்றி.
வடிவென்றார் வந்தோரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாலி கட்டுதல்**

தந்தையைப்போலும் ஊரின்
தலைவராம் தம்பாப் போடி
தந்தனர் தனயன் கையில்
தாலியை வாங்கிச் செல்லன்
சந்தனச் சிலையாள் அன்னம்
சங்குமா மணிக் கழுத்தில்
வந்தவர் வாழ்த்த மூன்று
வளையமாய் முடிச்சுப் போட்டான்.

**கால்கழுவுதல்**

தாலியைக் கட்டி ஆங்கே
தம்பதி யானோர் வீட்டு
மாலுக்குள் ஏகு முன்னம்
மாப்பிள்ளைத் தோழன் மச்சான்
கால்களைக் கழுவித் தங்க
கணையாழி பெற்றுக்கொள்ள
"ஆலாத்தி எங்கே?" என்று
அவசரப்பட்டாள் பெத்தா.

**ஆலாத்தி எடுத்தல்**

சிறு 'குன்றிமணி' பதித்தே
செய்ததோர் கொழுக்கட்டை மேல்
எரிகின்ற ஆலாத்தித் தீ
எடுத்தார்கள்! மணம்முடித்தோர்
பெறுகின்ற மலர்ச்சி கண்டு
பெற்றோரும் மகிழ்ச்சியுற்றார்.
'சரி' என்றாள் பெத்தா மேலும்
சடங்கினைத் தொடரலுற்றாள்!

**கலத்தில் போடுதல்**

பெட்டையை உள்வீட்டுக்குள்
பெத்தாதான் கூட்டிப் போனாள்!
கட்டிய கணவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலத்திலே போட என்று.
வட்டியும் சவரக்காலும்
வந்தது; கனகம் ஓடிச்
சட்டிக்குள் கறிகள் ஏழு
தயிர்பழம் கொண்டு வந்தாள்!

பாத்திரம் கொள்ளாமட்டில்
பலகார வகையும் வைத்தாள்.
கோத்திரம் அறிந்து பெண்ணைக்
கொடுத்தனன் அழகிப் போடி!
காத்திருந் தவள்போல் அன்னம்
கையினால் பிசைந்து சோற்றைத்
தீத்தினாள் செல்லன் வாயில்
திசைநாலும் மறந்தான் செல்லன்!

ஊர்எனத் திரண்டிருந்தார்
உறவினர்; வீட்டின் உள்ளே
கார்முகில் குழலாள் அன்னம்
கணவனைக் கலத்தில் ஊட்டப்
பார்வதிப் பெத்தா பார்த்து
'பகிடி' யும் விட்டாள். பின்னர்
"ஆரப்பா அங்கே? பந்தி
அலுவலைக் கவனி" என்றாள்!

**பந்தி வைத்தல்**

இனசனம் ஒவ்வொன்றாக
இருத்தியே இலையும் போட்டு
அனைவரும் வரிசையாக
அமர்ந்தபின் உறவு கண்டு
மனமெலாம் மகிழ்ச்சி பொங்க
மணப்பெண்ணை ஈன்ற அன்னை
கனகமோ ஓடி ஓடிக்
கல்யாணப் பந்தி வைத்தாள்.

பந்தியை முடித்த பின்னர்
பார்வதிப் பெத்தா கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தினாள் இல்லை. உள்ளம்
குதூகலம் கொள்ள, உண்டு
வந்தவர்க்கெல்லாம் முன்னே
வட்டாவை நீட்டி நீட்டி
தந்தனள் மகிழ்ச்சியோடு;
தாம்பூலம் தரித்தார் ஊரார்!

கலத்திலே போட்ட பின்னர்
கல்யாணச் சோடி தன்னை
'வளத்துடன் வாழ்க!' என்று
வந்தவர் பரிசும் தந்து
குலக்கொடி அன்னம் - செல்லன்
குடும்பமோ நாளை ஊரில்
நலத்துடன் வாழும் என்னும்
நம்பிக்கை யோடும் போனார்.

**முதலிரவு**

ஆவணியில் செல்லன்தன்
அன்னத்தின் கைப்பிடித்தான்
அன்றோர் நாளில்
தாவணியில் நின்றவளைத்
தனகியதை எண்ணித்தன்
முன்னே அன்னம்
தேவதையாய்த் திகழ்கின்றாள்
தேக்கினிலே செதுக்கிவைத்த
சிலைபோல் இன்னும்
ஆவதென்ன இனிமேலும்
ஆசையினை அடக்கிவைத்தல்
ஆகுமாமோ?
உன்னியெழும் ஆசையெலாம்
உடலெங்கும் உணர்ச்சியினை
ஊட்டித்தள்ள
கண்ணிலெழும் காதல்வெறி
கரைபுரளக் காத்திருக்கும்
கணவன் முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணிலவின் முழுமையுடன்
தளிர்க்கொடியின் இளமையுடன்
தகதகக்க
அன்னமவள் அருகுவர
ஆணழகன் செல்லையா
அணைத்துமெல்ல

கூந்தலினைக் கோதிவிட்டான்
குளிர்வதனம் குங்குமமாய்ச்
சிவந்தாள் அன்னம்;
வேந்தன் என விளங்குமவன்
விரிமார்வில் மென்விரல்கள்
வீணை மீட்ட
மாந்துகிறான் மங்கையவள்
மலரிதழில் ஊறிவரும்
மதுவைச் செல்லன்;
ஏந்துகிறான் இடைதுவளும்
ஏதிழையை இருவருக்கும்
இன்பம் பொங்கும்!

அன்னம்மா அவன்வசமே
ஆட்பட்டாள் அவனுக்குள்
அடங்கிப் போனாள்;
எண்ணமெலாம் ஒன்றெனவே
இருவருக்கும் ஆகிவிட
எல்லை மீறிப்
பின்னியுடல் பாம்பிரண்டாய்(ப்)
பிணைந்தார்கள்; இன்பவெள்ளம்
பீறிப்பாய
கன்னியவள் சொர்க்கத்தின்
கதவுகளைத் திறந்துவிட்ட
களிப்பிலுற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தும் கடலோரம் காய்கின்ற வெண்ணிலவில்
பத்து மலரின் விரல்பற்றி - முத்தங்கள்
அன்னம் மகிழ அளித்தான் அவன் செல்லன்
கன்னம் சிவந்தாள் கனி.

முற்றிப்பழுத்த கனியின் முழுச்சாறு
பற்றி இதழின் வழிபறித்து - சிற்றிடையாள்
மேனி எழில் சுவைத்தான் இன்பம் மிகக் கொடுத்தான்
கூனி இருந்தாள் கொடி.

தாலிக்காய் ஏங்கித் தவித்த மன ஆசைக்கு
வேலியிடவில்லை விரல்கள் - கோலி
அணைத்தான்! உடலிரண்டை அந்நொடியில் ஒன்றாய்
நினைத்தான்! குழைந்தாள் நிலா!

சங்குக் கழுத்தில் சரமெனவே கைகோர்த்து
தங்கக் குடங்கள் தழுவினான் - மங்கையுடல்
கூடிக்கிடந்தான்! கொழுநன் உடலின்பம்
ஆடிக்கிடந்தாள் அவள்!

**கால்மாறிப் போதல்**

வாழ்வினில் அன்னம் வாய்த்த
வரம்எனச் செல்லன் வாழ்ந்தான்.
வேல்விழி அன்னம்மாவோ
வேண்டிய தெல்லாம் பெற்றாள்.
நாள்களோ நலமாய்ச் செல்ல
நல்லொரு நாளில் ஒன்றாய்
* 'கால்மாறிப் போயும்' வந்தார்
காலமோ கடுகி ஓடும்.

* கால்மாறிப்போதல் - புதுமணத் தம்பதியர் முதன் முதல் மாப்பிள்ளை வீட்டிற்கு விஜயம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: 'வேளாண்மை'க் காவியம் (1) குடல் (2) கதிர் என இரு பகுதிகளைக் கொண்டது. அதன் தொடர்ச்சியான 'விளைச்சல்' காவியம் (3) காய் (4) பழம் எனத் தொடர்கிறது. இத்துடன் விளைச்சல் காவியத்தின் 'காய்' பகுதி முற்றிற்று. இனி வரும் 'பழம்' பகுதியே காவியத்தின் இறுதிப்பகுதி.

# 4. பழம்

**அன்னம் கருவுற்றாள்.**

அன்னமும் செல்லையாவும்
அன்றில்கள் ஆனார்! வாழ்வில்
கன்னிமை கழிய அன்னம்
கனியொன்றைக் கருவிலுற்றாள்.
"என்னடீ..! இன்னும்.?" என்றே
எதையோ தான் அறிந்து கொள்ளப்
பின்னாலே திரிந்தாள் பெத்தா
பிடியொன்றும் பெற்றாள் இல்லை.

நாட்களோ நகர்ந்து மாதம்
நான்கினைக் கடந்து போக,
ஊர்க்கடை முன்னாள் ஓர்நாள்
உலாவந்த செல்லையாவைக்
கூப்பிட்டான் வண்டிக்கார
குடிவெறிச் சாமித்தம்பி.
'ஆப்பிட்டான் செல்லன்' என்று
அடுத்தவர் விலகிப் போனார்.

"என்னடா .. இளைய போடி
இன்னுமா ஒன்றும் இல்லை.
சொன்னால்தான் என்ன? அம்மை
சொன்னதால் சொல்லவேணும்.
அன்னம்மா வயிற்றில் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் காணோம் என்று
பொன்னம்மா பொருமுகின்றாள்.
பொடிச்சியின் நிலைமை என்ன?"

சாமியோ விட்டான் இல்லை
சாராய வெறியில் நின்று
பூமியில் தள்ளம் பாறி
புழுதியில் விழவும் பார்த்தான்.
'ஓம்' என்று செல்லன் சேதி
ஒருவாறாய்ச் சொல்லக்கேட்டு
சாமியோ சத்தமிட்டுச்
"சரியான ஆள் நீ" என்றான்.

முழுமதி தினத்தில் அன்று
முகில் இலா வான் பரப்பில்
எழுகிற நிலவைப்போல
எழில்கொளும் மகளைக் கண்டு
"புழுகிழு உண்டா யிற்றா?
புள்ள" என் றன்னை கேட்க
முழுகிநான் மாதமொன்று
முடிந்ததாய்ச் சொன்னாள் அன்னம்.

மனதிலே மகிழ்ச்சி வெள்ளம்
மடையினை யுடைத்துப் பாயக்
கனவெலாம் நனவாய் ஆகிக்
கனிந்தது காலம் என்றே
இனம்புரி யாதஇன்பம்
ஏந்திய கனகம், மச்சாள்
மனையினை நாடி ஓடி
மங்கலச் சேதி சொன்னாள்.

**பொன்னம்மா மகிழ்ச்சி**

கனகம்மா களிப்பில் அன்னம்
கருவுற்ற சேதி சொல்ல
மனமிக மகிழ்ந்த பொன்னு
மச்சாளை இருத்திப் பாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுணங்காமல் குசினி சென்று
சுடுதேநீர் கொணர்ந்து வைத்து
மனங்கோணா வண்ணம் மச்சாள்
மற்றெல்லா வகையும் செய்தாள்.

**வளரும் கரு**

ஒரு மாதம் நிறைந்த அன்னம்
உதிரமோ மிகத் திரண்டாள்.
இரு மாதம் முடிந்த பின்னர்
இரு விழிகள் வெண்மையுற்று
முருகுடை முகமோ மூன்றில்
முழுவதும் வெளுக்கக் கண்டு
உருகியே நின்றாள் பெத்தா.
உண்மையைப் பெற்றாள் இல்லை.

**பார்வதிப் பெத்தாவின் மகிழ்ச்சி**

எள்ளினாள் பெத்தா "அன்னம்
என்னடீ... வயிற்றில் இன்னும்
புள்ளயக் காணோம்" என்று.
புளி மாங்காய் தின்னக்கண்டு
'கள்ளி நீ அன்னம்' என்று
கத்தினாள்; பின்னர் கையால்
அள்ளினாள் அன்னம்மாவை
ஆசையில் முத்தமிட்டாள்.

**கரு மேலும் வளர்ந்தது**

மசக்கையில் ஓர் நாள் அன்னம்
மயங்கியும் வீழ்ந்தாள்; பெத்தா
"இசக்கமே இல்லாப் பிள்ளை
எப்படித் தாங்குவாளோ?"
கசக்கியே கண்ணீர் மல்க
கவலையும் பட்டாள்; தொட்டு
உசுப்பினாள் எழும்பி நின்றே
ஓங்காளம் எடுத்தாள் அன்னம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்முகில் வளாது பெய்து
வயற்காடு செழித்தாற்போல
கோன் அவள் கொழுநன் செல்லன்
கொட்டிய அன்பினாலே
ஊனொடு உள்ளம் ஒன்றாய்
உவகையில் உப்பி மாதம்
நான்கினைக் கடந்த அன்னம்
நாவுக்கு ருசியாய்க் கேட்டாள்.

அன்னம்மா பிள்ளைத்தாச்சி
அவளுக்குச் சோட்டை என்றே
பெண்ணவள் சொந்தக்காரர்
பேராசையோடு கூடி
பண்ணினார் பலகாரங்கள்
பரிவாரத் தோடுசேர்ந்தே
அன்னத்தின் வீடு நோக்கி
அணிஅணி யாகப்போனார்.

அன்னம்தன் முலை யிரண்டும்
ஐந்திலே கறுத்தாள்; ஆறில்
அன்னத்தின் வயிறு மெல்ல
அடியிலே கனத்து மேலும்
எண்ணியே ஏழில் எட்டில்
இருந்தெழும் பேலாதாகி
ஒன்பதாம் மாதம் தன்னில்
ஓயாத நோக்காடுற்றாள்.

மாதங்கள் பத்து ஓடி
மறைந்தன. மேலும் உப்பி
ஊதிய வயிற்றுள் பிள்ளை
உதைப்பதும் உணர்ந்தாள் அன்னம்.
காதலில் கணவன்கூடி
கனியொன்றைப் பெற்றுக்கொள்ள
மாதவம் செய்தேன் என்று
மகிழ்ந்தது தாய்மை உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனி பிறந்தது

சாய்ந்தரம் ஓர் நாள் அன்னம்
சாடையாய் நோகுதென்று
சாய்ந்தனள் வயிற்றைத் தொட்டு
சாயவும் கனகம் ஓடி
மாய்ந்தனள்; மருத்து விச்சி
மணி ஆச்சி அனுபவங்கள்
வாய்ந்தவள். அவளைச்செல்லன்
வண்டிலில் கூட்டி வந்தான்.

அன்னமோ 'மஞ்சு' வீட்டுள்
அனுகினாள்; அவதிப்பட்டாள்
உன்னியே எழும்பி ஏகும்
உபாதையில். மருத்துவிச்சி
பண்ணினாள் பரிகாரங்கள்
பார்வதிப் பெத்தா கூட.
பன்னீர்க் குடமுடைந்து
பாலகன் வெளியில் வீழ்ந்தான்.

## தாயும் சேயும்

பார்வதிப் பெத்தா ஓடி
பரிகாரம் பண்ணலானாள்.
வேர்க்கொம்புக் கோப்பியோடு
வெதுப்பிய 'வாட்டுரொட்டி'
சோர்வினைப் போக்க அன்னம்
சுவைத்துண்ணத் தந்தாள். மற்றோர்
ஆரைப்போல் பிள்ளையென்று
ஆளுக்காள் அலசலுற்றார்.

கூரான மூக்கு செல்லன்
குமிழ்நாடி அன்னம் என்றார்.
நேரான மேவாய் கால்கள்
நீளமாய் என்றார். மேலும்
ஏர்போலும் ஏறு நெற்றி
இவன் பின்னர் எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரான பிள்ளையாவான்.
பெற்றாளைப் பார்த்துச் சொன்னார்.

தெள்ளிய தவிட்டில் பிள்ளை
தேகத்தைப் பிரட்டி நன்கு
மெல்லிய சூட்டில் நீரால்
மேனியைக் கழுவினார்கள்.
"செல்லனைப் போல நல்ல
சிவப்புத்தான் பிள்ளை" என்று
சொல்லவும் பெத்தா கேட்டுச்
சோர்வெலாம் நீத்தாள் அன்னம்.

'காட்டுப் பீ' கண்ட பின்னர் (காட்டுப்பீ - குழந்தை பிறந்து முதல் கழிக்கும் மலம்)
கனகம்மா சென்று சீனி
போட்டுவெந் நீரில் செய்து
பொத்தியே கொணர்ந்து வாயில்
ஊட்டினாள் கரண்டியாலே
உமிஞ்சியே குடிக்கப் பிள்ளை
ஓட்டமாய் ஓடிப் பெத்தா
ஓமம்போட் டிடித்த நல்ல

கோப்பியைக் கொணர்ந்து வைத்து
"குடி அன்னம்" என்றாள்; பின்னர்
"காப்பாத்து அம்மாள்! தாயே!
கஸ்டங்கள் நீக்குவாயே!"
கூப்பினாள் கரங்கள் மேலே.
கொல்லையில் ஆய்ந்து வந்த
வேப்பிலைக் கொத்தைப் பிய்த்து
வெளியிலே 'காவல்' போட்டாள்.

**செல்லனின் மகிழ்ச்சி**

செல்லனைத் தேடிக் கண்கள்
செலுத்தினாள் அன்னம்; செல்லன்
கள்ளனைப்போல மெல்ல
கதவினைத் திறந்து உள்ளே
பிள்ளையைப் பார்க்கும் ஆவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீறிட்டுப் பாய வந்தான்.
கிள்ளையைப் போல பிள்ளை
கிடந்தது கிட்டே வந்து,

கன்னத்தைத் தடவினான்; பின்
காதினைக் கோதிவிட்டான்.
எண்ணத்தைப் புரிந்த மற்ற
எல்லோரும் வெளியிற் செல்ல
அன்னத்தை முத்தமிட்டான்.
அவளும்தான் ஆனந்தத்தில்
"என்னத்தான்?" என்றாள். செல்லன்
"இன்னொன்று பெறுவோம்" என்றான்.

'கட்டாடி' வந்து மாற்றுக்
கந்தையும் கொடுத்து மீண்டான்.
கிட்டடிச் சொந்தக் காரர்
கேள்வியும் பட்டு வந்தார்.
வட்டாவைக் கனகம் வைக்க
வாய்க்கும்தான் போட்டுக் கொண்டு
வட்டமாய் இருந்துஊரின்
வம்புகள் அளந்தும் கொண்டார்.

**உலக்கை எறிதல்**

குலக்கொழுந் தன்னம் ஈன்ற
குழந்தையோ ஆண்தான் என்று
உலக்கையைக் கந்தர் நீட்டி
ஓங்கியே எறியச் சொல்ல
வலக்கையால் வாங்கி ஊரின்
வழக்கம்போல் கூரை மேலால்
இலக்குடன் எறிந்தான் செல்லன்.
'எழுப்பம்தான்' என்றார் நின்றோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பத்தில் மகிழ்ச்சி

பிள்ளைக்குப் பாலையூட்டிப்
பெருமகிழ்வடைந்தாள் அன்னம்.
செல்லனும் ஓடி ஓடிச்
செலவெலாம் பார்த்தான். பெத்தா
துள்ளினாள் குமரி போல
தூக்கியே மடியில் வைத்து
பிள்ளையைக் கொஞ்சிக் கொஞ்சிப்
பேராசை தீர்த்துக் கொண்டாள்.

பேரனைப் பெற்ற கந்தர்
பெருமிதம் கொண்டார். வண்டிக்
காரனாம் சாமித் தம்பி
'வடி'யிலே வார்த்துக் கொண்டே (வடி - சாராயம்)
ஊரெலாம் சுற்றி வந்து
உளறினான். கேட்டுச் சொந்தக்
காரரும் களிப்பில் வந்து
கடமைகள் செய்து மீண்டார்.

அழகரும் கனகம்மாவும்
அன்னத்தின் மாமி பொன்னும்
உலகினை ஆள்வான் தம்மை
உயர்த்துவான் பேரன் என்றே
அளவிலா ஆனந்தத்தில்
ஆசையை அறைந்தார். மேலும்
உளமெலாம் உவகை பூக்க
உறவெலாம் உபசரித்தார்.

## அன்னத்தைக் கவனித்தல்

அன்னத்தின் வயிற்றை நன்கு
அமர்த்தியே இறுக்கிக் கட்டி
உண்ணவே கோப்பி யோடு
உலர்ந்த பாண்; சுவாதம் போக்கும்
எண்ணெயும் தலைக்கு வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கவும் குளிசை உள்ளே.
பண்ணினாள் பெத்தா யாவும்.
'பரிசாரி' பகன்ற வாறே.

இருதினம் கோப்பியோடு
இருந்தனள் மூன்றாம் நாளில்
அருமையாய்த் தேடி வாங்கி
அழகரும் கொணர்ந்த சுங்கான்
கருவாட்டுக் குழம்பினோடு
கைக்குத் தரிசிச் சோற்றை
ஒருநேரம் மட்டும் உண்டாள்.
உடம்பும்தான் தேறலுற்றாள்.

வேர்க்கொம்பு, மிளகு, மஞ்சள்
வெள்ளை வெங்காயம், ஓமம்
சேர்க்கின்ற சரக்காம் இன்னும்
சீரகம், 'பறங்கி', மல்லி (பறங்கிக் கிழங்கு)
ஊக்கமாய்ச் சேர்த் திடித்து
உருண்டையாய் மாவைக் கையால்
ஆக்கிய 'காயம்' அன்னம்
அளவோடு தேனில் உண்டாள்.

குழந்தைக்கு இரண்டாம் நாளில்
குளிப்பில்லை; மூன்றாம் நாளில்
கலந்திளம் சூட்டு நீரில்
கழுவியே மேனி பெத்தா
பழந்துணி மெல்லிதாகப்
பார்த்தணி வித்தாள். பின்னர்
குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டிக்
குதூகலித்திருந்தாள் அன்னம்.

சேயினை ஐந்தாம் நாளில்
சிரசிலே முழுக வார்த்தார்.
தாயினை இலைகள், பட்டை
தண்ணீரில் கொதிக்கவைத்த
தூயவெந்நீரில் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்த்தனர் இடுப்பின் கீழே.
'காயமும்' இரண்டு நேரம்
கைக்குத்தரிசிச் சோறு,

பத்திய மீன்களோடு
பதமான 'மிளகுதண்ணி',
பத்திர மாகக் கொஞ்சம்
பதுக்கிய சாராயத்தைப்
பொத்தியே கொடுத்தாள் பெத்தா
பொக்கைவாய்ச் சிரிப்பினோடு.
சுத்தமாய் யாவும் உண்டு
சோர்வெலாம் நீத்தாள் அன்னம்.

ஒன்பதாம் நாளில் மஞ்சள்,
உப்பொடு கொறுக்காய் சேர்த்த
வெந்நீரைத் தலையில் வார்த்து
வேர்க்கொம்பு, அசமதாகம்
சின்னொரு 'கிளாசில்' இட்டு
சேர்த்துடன் சாராயத்தை
கண்ணினை மூடிக்கொண்டே
கவிழ்த்தனள் வாயுள். பின்னர்,

துள்ளவே உயிரோ டாற்றில்
தூண்டிலில் பிடித்து வந்த
'சள்ளல்' மீன் கோர்வை வாங்கி (சள்ளல் - மீன்வகை)
சரக்கெலாம் அரைத்துப்போட்டு
'சுள்'ளென உறைக்கு மாப்போல்
சுவைபடக் குழம்பு வைத்து
அள்ளியே கனகம் இட்டாள்.
ஆசையோ டன்னம் உண்டாள்.

ஒன்பதாம் நாளில் மீண்டும்
உச்சியில் முழுக வார்த்தே
அன்புடன் அணைத்துத் தாய்ப்பால்
அமுதமும் ஊட்டிப் பிள்ளை
கண்படா வண்ணம் மாற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணூறும் கழிக்க நல்ல
தெம்புடன் தேகம் தேறி
திகழ்ந்தனர் தாயும் சேயும்.

பொடுக்கென ஓர்நாள் பிள்ளை
பொக்கணிக் கொடியும் வீழ
விடுக்கென வந்தாள் பெத்தா.
வேர்க்கொம்புத் துண்டை வீட்டின்
அடுப்பினுள் இட்டாள். பின்னர்
அரைத்ததை மாவாய் ஆக்கி
இடுக்கியே விரலால் உண்டி
இட்டனள் காயம் மீது.

பன்னிரு நாளில் அன்னம்
பச்சைத் தண்ணீரில் எண்ணி
பன்னிரு வாளி வார்த்தாள்.
பழையதை ஊறவைத்த
அன்னத்தை தேங்காய்ப்பாலும்
அதனுடன் வெல்லக்கட்டி
சின்னதாய் 'கோழிச்சூடன்' (கோழிச்சூடன் வாழைப்பழம்)
சேர்த்துமே உண்டாள் காலை.

குழந்தையை தலையில் மேலும்
குளிப்பாட்டி புதியசட்டை,
முழங்கையால் அளந்து நாடா
முடிந்துமே இடுப்பில் போட்டார்.
குழம்புமீன் கொறுக்காய் போட்டு
கொடுத்தனர் மதியம். அன்னம்
கலந்துடன் சோற்றை உண்டு
களித்தனள். இரவும் அஃதே.

பதின்மூன்றாம் நாளும் மற்றும்
பதினாலும் பச்சைத் தண்ணீர்;
பதினைந்தாம் நாளில் மீண்டும்
பதமாகக் கலந்த தூய
கொதிநீரில் முழுகிக் கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிக்கவும் கொடுக்க பெத்தா
அதிமகிழ் வடைந்து அன்னம்
அதனையும் வாங்கி யுண்டாள்.

**குறிப்பு எழுதுதல்**

இடையிலே ஏழாம் நாளில்
எருவிலில் இருந்து தோளில் (எருவில் - மட்டக்களப்பு கிராமம் ஒன்றின் பெயர்)
குடையுடன் பையும் தூங்க
குடுமியும் கடுக்கண் காதில்
நடையிலே வந்த ஆளின்
நாமமோ நாக நாதன்
'சடைமுடிச் சாமி' என்பார்
சாத்திரம் சொல்ல வல்லார்.

செல்லனோ ஓடிச் சென்று
சிரசினைத் தாழ்த்தி "ஐயா!
நல்லொரு நேரம் எம்மை
நாடியே வந்தீர். எல்லாம்
வல்லவன் செயல்தான். எங்கள்
வாரிசின் குறிப்பை இன்று
சொல்லுங்கள்" என்றான். சாமி
"சொல்லவே வந்தேன்" என்றார்.

குழந்தையின் பிறந்த நேரம்
குறித்துப் பின் கணக்குப் பார்த்து
குழந்தையின் முகத்தைக் கண்கள்
குத்திட நோக்கி நன்றாய்
அளந்தனர் கண்ணால் பின்னர்
ஆணியைப் பதித்து ஏட்டில்
முழங்கையோ முகத்தைத் தாங்க
முறுவலோ முகத்தில் தேங்க,

எழுதினார் குறிப்பை ஏட்டில்.
எடுத்ததை மஞ்சள் நீரில்
கழுவினார். பின்னர் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயவும் காத்திருந்து
"வழுவிலாப் பிள்ளை வந்து
வாய்த்தது! வாழ்வு ஓங்கும்!
பழுதிலாக் குறிப் பிதுபோல்
பார்த்ததே இல்லை. மேலும்

'பரணி'யில் பிறந்த பிள்ளை (பரணி நட்சத்திரம்)
பாருங்கள் இருந்து பின்னால்
தரணியை ஆள்வான். செல்வம்
தானாக வந்து சேரும்.
வரமென வந்தான். வாழ்வில்
வளமெலாம் பெருகும். பெற்றோர்
தரமெலாம் ஓங்கும்" என்றார்
தாளினைப் பணிந்தான் செல்லன்.

**குடும்ப மகிழ்ச்சி**

சாத்திரம் சொல்லக் கேட்டு
சந்தோஷமடைந்த பெற்றோர்
கோத்திரம் தழைக்கவந்த
குழந்தையே இதுவென் றெண்ணி
ஆர்த்தனர்; அழகிப்போடி
ஆனந்தப்பட்டார். கந்தர்
மாத்திரம் என்ன மற்ற
மனைவிபொன் னம்மா வோடு,

கனகமும் சேர்ந்து மிக்க
களிப்பிலே பேரன் தங்கள்
கனவெலாம் நனவாய் ஆக்கிக்
காட்டுவான் என்றும் சொன்னார்.
இனசனம் என்று வந்தோர்
இவன் பிள்ளை எங்களுக்கும்
தனமெலாம் தருவான் என்று
தம்முள்ளே மகிழ்ந்து போனார்.

பார்வதிப் பெத்தா நெஞ்சில்
பால்பொங்கி வழிய ஓடி
ஊரெலாம் கொள்ளுப்பேரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வினைச் சொல்லிச் சொல்லி
'பாரினை ஆளவந்த
பாலகன் பேரன் செல்லன்
பேர் சொல்ல வந்த பிள்ளை'
பெருமையாய்ப் பீத்திக் கொண்டாள்.

### குழந்தைக்குப் பெயர் வைத்தல்

பேர் வைக்க வேண்டும் என்று
பெரியோர்கள் பேசிக்கொள்ள
ஆர்வத்தில் அன்னம்மாவும்
"அதுதானே!" என்றாள். செல்லன்
பார்வையால் சாமியாரைப்
பகன்றிடச் சொல்ல மற்றோர்
பேரினை அறியும் ஆவல்
பீறிட நின்றார். அன்னம்,

"ஆனாவில் வைப்போம் பேரை
அது நல்லம்" என்றாள். கந்தர்
கானாவில் வைத்தால் என்ன
கனகமும் ஒத்துக் கொண்டாள்.
ஆனாலும் சாமி ஈற்றில்
அனைவரும் ஏற்கும் வண்ணம்
சூனாதான் பொருத்தம் என்றார்.
'சுந்தரம்' என்றான் செல்லன்.

'சுந்தரம்' என்று செல்லன்
சொன்னதும் குழந்தை காதில்
மந்திரம் போலும் பேரை
மறுபடிச் சொல்ல அன்னம்
கந்தரும் பொன்னம்மாவும்
கனகமும் அழகி மற்றும்
வந்திருந் தாட்கள் எல்லாம்
வரிசையாய் வந்து சொன்னார்.

பார்வதிப் பெத்தா பேரை
பலதரம் சொல்லிப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர் அவள் குடும்பத்தார்க்கு.
விழுதினாய் வந்த கொள்ளுப்
பேரனின் பேரை எங்கும்
பெருமையாய்ச் சொல்லி சொல்லி
ஊரெலாம் வந்தாள் ஓடி
உடம்புந்தான் களைத்துப் போனாள்.

**செ**ல்லனோ கடைக்குச் சென்று
'சில்க்'கிலே வேட்டி சால்வை
நல்லதாய்த் தெரிந்து வாங்கி
நடையிலே ஓடி வந்து
"சொல்லியே வைத்தால்போல
சுபநேரம் வந்தீர்" என்று
சொல்லியே நீட்டச் சாமி
"சுந்தரம் வாழ்க" என்றார்.

**த**ட்டிலே வேறாய்ச் செல்லன்
தட்சணைக் காசை வைக்க
எட்டியே எடுத்துச் சாமி
இடுப்பிலே செருகிக் கொண்டு
கிட்டடிச் சொந்தக்காரர்
கிரமமாய் முன்னேவந்து
வட்டமாய் அமரச் சொல்லி
வாழ்த்தியும் விபூதி தந்தார்.

"**சா**ப்பிட்டுப் போகவேணும்
சாமியே" என்று செல்லன்
கூப்பிட்டான் பெத்தா ஓடி
குசினிக்குள் இருந்து வந்து
"ஏற்பாட்டைப் பண்ணிவிட்டோம்
எழும்புங்கள்" என்றாள். சாமி
சாப்பிட்டார் மதியம் பின்னர்
சாய்ந்தரம் திரும்பிப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு**ப்பதாம் நாளில் வீட்டை
முழுவதும் கழுவிப் பெத்தா
செப்பமாய்ச் சுத்தமாக்கிச்
செய்தனள் துடக்குப்போக.
"கொப்பன் உன் செல்லன் எங்கே?"
குழந்தையைச் செல்லம் கேட்டு
அப்பினாள் பொக்கைவாயால்
ஆயிரம்தடவை முத்தம்.

**மு**ப்பது நாள்கள் ஏகி
முப்பத்தி யோராம் நாளும்
எப்படி வந்ததென்றே
எவருக்கும் தெரியவில்லை.
அப்படிக் காலம் ஓடி
அமைந்த நல் 'மருங்கை' நாளை
செப்பினர் ஊருக்கெல்லாம்
சேர்ந்தனர் சுற்றத்தார்கள்.

**கா**லையில் நேரத்தோடு
கட்டாடி காத்தான் வெள்ளைச்
சேலையை விரித்து வீட்டுள்
செய்வன யாவும் செய்தான்.
காலையில் இருந்தே வண்டிக்
காரனாம் சாமித்தம்பி
வேலைகள் பார்த்துக்கொண்டே
விருந்தின்று பெரிதே என்றான்.

**கு**ம்பமும் விளக்கும் வைத்து
குழந்தைக்குத் தேங்காய்ப்பாலை
செம்பிலே எடுத்து அன்னம்
சிரசிலே அள்ளித்தப்ப
எம்பிய பிள்ளை தோளில்
இதமாகச்செல்லன் தட்ட
அம்பட்டன் நேரம் பார்த்தே
அழகாக வழித்தும் விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு**டியினை இறக்கி வெந்நீர்
முழுகவும் வார்த்துப் பிள்ளை
மடியினில் வைத்து அன்னம்
மகிழ்ந்தனள். புதிய சட்டை
வடிவென வந்தோரெல்லாம்
வாய்விட்டுச் சொல்லப் பெத்தா
கடிதென வந்தாள் துப்பி
கண்ணூறும் கழித்துவிட்டாள்.

**ம**ருத்துவப் பெண்ணைப் பெத்தா
மகிழ்ச்சியோ டிருத்திப் பாயில்
பருத்தியில் நல்ல சேலை
பணமும்தான் கொண்டு வைக்க
குருத்தோலை போலும் கன்னிக்
குலையீன்ற தென்னையாக
உருத்தோற்றம் உடைய அன்னம்
உவப்புடன் எடுத்தே ஈந்தாள்.

**க**ட்டாடி காத்தான் 'பாபர்'
கணபதிக் கென்று செல்லன்
பட்டுப்போல் வேட்டி 'சேட்டு'
பரிசோடு பணமும் தந்து
மட்டிலா மகிழ்ச்சி கொள்ள
மறைவிலே கண்ணைக் காட்டி
'எட்டுறாம்'போத்த லொன்றை
எடுத்தங்கே வைத்தான் சாமி!

**கா**லையில் இருந்தே சாமி
கணக்காகப் போட்டுக் கொண்டான்.
வேலைக்கு ஆள்தான் கந்தர்
விருந்துக்குப் பொறுப்பாய் விட்டார்.
சாலையில் போனோ ரெல்லாம்
சாமியைப் பார்த்து வேலி
ஓலைக்கு மேலால் எட்டி
"உன்பாடு ஓகோ" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலையின் கழுத்தில் தங்க
மாலையைப் போட்டான் செல்லன்.
அழகரும் கனகம்மாவும்
ஆளுக்கோர் காப்புக்கூட்டம்.
புளகாங் கிதத்தில் கந்தர்
பூணாரம் அள்ளிப் போட
வழமைபோல் சுற்றத்தார்கள்
வசதிபோல் பரிசு தந்தார்.

விருந்துக்கு முன்னர் செல்லன்
வீட்டிற்கு வந்தோர்க்கெல்லாம்
'மருந்து' கள் தந்தான் பிள்ளை
மருங்கையின் பேரில்; ஆண்கள்
அருந்தினர்; அளவாய்ப் பின்னர்
அனைவரும் அமுதம் உண்டு
'விருந்தென்றால் விருந்து மாரி
விளைச்சல்போல்' - வியந்து மீண்டார்.

விளைச்சலால் வீடு பொங்கும் !
விருந்தினால் உறவு தங்கும்!
களிப்புற மக்கள் மண்ணில்
கருமங்கள் ஆற்றி என்றும்
செழிப்புறச் சேர்ந்து வாழ்வர்!
சேமமே எங்கும் தங்கும்!
விளைச்சலை வேண்டி என்றும்
வேளாண்மை செய்து வாழ்வோம் !

**'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சியான**
**'விளைச்சல்' காவியம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலி – 1



**மண் அப்பிய இலக்கியம்** **உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்**

நிலாவெளிச்சத்தில் - தேனாட்டின் பேரெழிலாய் நீண்டு வளைந்து கிடக்கும் உப்பேரியில் - நீரர மகளிர் பாடல் கேட்டு மண்ணின் அழகிலும் பண்ணின் அழகிலும் மகிழ்ந்து நெகிழ்ந்து தமிழ் உலா நிகழ்த்திய விபுலானந்த அடிகளாரின் நிலமும் குலமுமாய்ச் செங்கதிரோனை நினைவு கொள்கிறேன்.

கடலின் நீலம் ஒரு பக்கம் - வயலின் பசுமை ஒரு பக்கம் நிறம் காட்டிக் கண்பறிக்கும் காரைதீவு மண்ணின் இலக்கியன்.

இனிய சிற்றூரார் தமிழ் வாழ்வும் - மரபும் - பழக்கவழக்கங்களும் காரைதீவில் நிறைந்தே இருக்கும்.

செங்கதிரோன் உள்ளத்தில் இயல்பாய் நீக்கமற நின்ற சிற்றூரார் தமிழ் வாழ்வே - நீலாவணனின் 'வேளாண்மை'க் குறுங்காப்பியத்தை நிறைவு செய்யும் அவர் முயற்சியும் ஆற்றலுமாய்ச் செந்தமிழ் 'விளைச்சல்' ஆயிற்று.

சிற்றூரார் வாய்த்தமிழான நாட்டுப் பாடலின் உயிர்ப்பை உள்வாங்கியே நீலாவணன் படைப்புகள் சிலிர்த்தன.

பண்டைப் பெரும் புலவர்களின் கடுந்தமிழ் உடைத்து- நீலாவணன் படைத்த நாட்டுத் தமிழின் 'பா' இலக்கியம் வரலாற்றில் புதிய பதிவு ஆயிற்று.

'பா' இலக்கிய நடையை நீலாவணன் உடைத்தாரே தவிர - 'பா' இலக்கண மரபை அவர் என்றுமே மீறியதில்லை.

நீலாவணனின் 'வோளாண்மை'க் குறுங்காப்பியம் இரு சிற்றூர் குடும்பங்களின் உறவு முறை வாழ்வை - அவர்கள் வாழ்வில் குறுகிய காலத்தில் நிகழும் சடங்குகளை இயம்புகிறது.

நீலாவணன் கண்களை மூடிப் பாதியில் விட்டுச் சென்ற 'வேளாண் மை'க் குறுங்காப்பியத்தை - செங்கதிரோன் 'விளைச்ச'லாய் நீள வளர்த்து அறுவடை நிகழ்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியர் நீலாவணன் நடையில் அவர் இலக்கியத்தைத் தொடர்ந்து எழுதி முடிக்கும் செங்கதிரோனின் தகுதி - 'விளைச்ச'லாகி இருக்கிறது.

**நீலாவணன் தமிழிலும் செங்கதிரோன் தமிழிலும் ஒரே நீரோட்டம்.**

*'ஆரங்கே? பொன்னம்மா உன்*
*அடுப்படி அலுவல் ஆச்சா?*
*நேரமும் கடந்து போச்சே!*
*நீ என்ன செய்கின்றாய்? போய்*
*சோறெடு.... சிவசிவா.. ஏய்*
*சுரைக்காயை என்ன செய்தாய்?*
*நீறினை நெற்றி யிட்டு*
*நெஞ்சினை வயலில் விட்டு*
*சோறொடும் மீனைப் பிட்டுச்*
*சுவைக்கின்றார் கந்தப்போடி'*

**இது – நீலாவணன் 'வேளாண்மை' இலக்கியம்**

*'வெந்தழல் நிறத்தில் கூறை*
*வெள்ளியில் சரிகை மின்ன*
*சொந்த மச்சாள்கள் கேலி*
*சொல்லவும் வெட்கி அன்னம்*
*செந்தளிர் மாவிலை போல்*
*சிவந்தனள்...சிலையைப் போல*
*வந்தனள் கூறை மாற்றி*
*வடிவென்றார் வந்தோரெல்லாம்?'*

**இது – செங்கதிரோன் 'விளைச்சல்' இலக்கியம்.**

'அடுப்படி அலுவல்' என்று நீலாவணன் கூறுவதும் - 'வடிவென்றார் வந்தோரெல்லாம்' என்று செங்கதிரோன் உரைப்பதும் சிற்றூரார் வாய்த் தமிழின் அழகேயாகும்.

இலக்கியர் நீலாவணனின் 'வோளாண்மை'யில் - குடலை, கதிர் எனும் இரு கதைப் பகுதிகளிலும் - செங்கதிரோனின் 'விளைச்ச'லில் - காய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம் எனும் இரு கதைப் பகுதிகளிலும் - ஒரே சொல்லாற்றல் - நடை - வீச்சு இருத்தலையே பார்க்கிறோம்.

நீலாவணன் தமிழுக்கு இணையான நாட்டுவழக்குச் சொற்களை செங்கதிரோனின் 'விளைச்ச'லில் நீக்கமறக் காணலாம்.

*'மாலைக்குள் மறைப்பில் நின்று*
*மறுகுவாய் ஒழுங்கைக்குள்ளே'*

*'வட்டாவைக் கனகம் நீட்ட*
*வா கா வா மச்சாள் என்று*
*தட்டோடு பொன்னு வாங்க'*

*'பொல்லாப்பு ஒண்டுமில்ல*
*பொன்னம்மா விடை பகர்ந்தாள்'*

*'பொம்பிளைத் தத்தியாரை*
*பொறுப்பாக நின்று எந்த*
*வம்பேதும் வந்திடாத*
*வண்ணம்நற்பந்தி வைத்தாள்.!'*

*'ஊர்ப்பட்ட உரித்துக்காரர்*
*ஊர்வலமாகச் செல்ல*
*மாப்பிள்ளைத் தோழன் முன்னே*
*மச்சானைக் கூட்டிப் போனார்.'*

*'காத்திருந் தவள் போல் அன்னம்*
*கையினால் பிசைந்து சோற்றைத்*
*தீத்தினாள் செல்லன் வாயில்'*

*'கூப்பிட்டான் வண்டிக் காரக்*
*குடிவெறிச் சாமித்தம்பி*
*ஆப்பிட்டான் செல்லன் என்று*
*அடுத்தவர் விலகிப் போனார்.'*

இயல்பான தேனாட்டார் வாய்த்தமிழ் இலக்கியம் ஆகி இருக்கிறது.

சிற்றூரார் மரபும் - பழக்கவழக்கங்களும் செங்கதிரோனின் விளைச்சலில் கொஞ்சமும் சிதைவுறாமல் பதிவாகி உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குழந்தை பிறந்தால் அப்பன் வீட்டுக் கூரையின் மேலே பாய்ந்து மறுபக்கம் விழ உலக்கையை வீசி எறியும் தேனாட்டார் வழக்கத்தை செங்கதிரோன் விளைச்சலில் பாடல் ஆக்கி இருக்கிறார்.

*குலக்கொழுந் தன்னம் ஈன்ற*
*குழந்தையோ ஆண்தான் என்று*
*உலக்கையைக் கந்தர் நீட்டி*
*ஓங்கியே எறியச் சொல்ல*
*வலக்கையால் வாங்கி ஊரின்*
*வழக்கம் போல் கூரை மேலால்*
*இலக்குடன் எறிந்தான் செல்லன்*
*"எழுப்பம் தான்" என்றார் நின்றோர்!*

மங்கல நிகழ்ச்சி ஒன்றினைத் தொடங்குவதற்குப் புறப்படும் போது முழுவிசளம் பார்க்கும் மட்டக்களப்பார் மரபைச் செங்கதிரோன் பதிவு செய்கிறார்.

*கொல்லையில் நின்ற கன்றுக்*
*குட்டி ஒன்றோடி வந்து*
*செல்லனின் வீட்டுத் திக்கில்*
*சென்றது... அழகிப் போடி*
*"வில்லங்கம் இல்லை" என்றார்*
*வீதியை எட்டிப் பார்த்து*
*"நல்லது முழிவியள்ளம்*
*நடவுங்கள்" என்று சொல்ல...?*

சமைதல் - மாப்பிள்ளை கேட்டுப் போதல் என்று தொடங்கி திருமணம் - பிள்ளைப்பேறு என்று தொடர்ந்து முடியும் வோளாண்மை - விளைச்சல் இரண்டிலும் மறைந்து கொண்டிருக்கும் தேனாட்டார்தம் பழைய மரபுகளும் - பழக்க வழக்கங்களும் அழியாத் தமிழாய்ப் பதிவாகி உள்ளன.

குழந்தையைப் பெற்றெடுத்த அன்னத்தை எப்படி அன்போடு கவனித்துக் கொள்கிறார்கள் என்பதைச் செங்கதிரோன் குறிக்கும் பாடல் வரிகள் மறக்க முடியாதவை.

*'துள்ளவே உயிரோ டாற்றில்*
*தூண்டிலில் பிடித்து வந்த*
*சள்ளல் மீன் கோர்வை வாங்கி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்கெலாம் அரைத்துப் போட்டு
சுள்ளென உறைக்கு மாப்போல்
சுவைபடக் குழம்பு வைத்து
அள்ளியே கனகம் இட்டாள்
ஆசையோ டன்னம் உண்டாள்'

இலக்கியர் செங்கதிரோன் தமிழை இனிது வாழ்த்துகிறேன்.

செங்கதிரோன் 'விளைச்சல்' செழித்த பயிர் விளைச்சல்.

*மண் அப்பிய இலக்கியம்.*
*சிற்றூரார் வாழ்வின் சிலிர்ப்பு.*
*புலம்பல் இல்லாத புலமை.*
*உயிர்ப்பான தமிழின் உலா.*

(காசி ஆனந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலி – 02



பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

**வேளாண்மையும் விளைச்சலும்**

நீலாவணன் தன் 'வேளாண்மை'க் காவியத்தை 1960களின் தொடக்க ஆண்டுகளில் எழுதினார். 1963ல் அல்லது 64ல் அவர் எழுதிய பகுதிகளை அவரே வாசித்துக் காட்டக் கேட்டும், அவரது கையெழுத்துப் பிரதிகளைப் படித்தும் மகிழ்ந்த நினைவுகள் இன்னும் பசுமையாக உள்ளன. அக் காலத்திலே இக்காவியத்தின் பல பாடல்கள் எனக்கு மனப்பாடமாக இருந்தன.

"வாரிக்காலா ஓ... ஓ... ஓ... வளைந்த கொம்பா ஓ... ஓ.... ஓ..." என்ற சூடடிக்கும் பாடலை நான் அடிக்கடி பாடுவேன். நீலாவணன் அதை இசையோடு பாடுவதைக் கேட்க அற்புதமாக இருக்கும்.

மட்டக்களப்புத் தமிழர்களின் விவசாயப் பண்பாட்டின் எல்லா அம்சங்களையும் தன் காவியத்தில் பதிவு செய்துவிட வேண்டும் என்ற பேராவல் அக்காவியத்தை எழுதும்போது அவருக்கு இருந்தது. 1964ல் அல்லது 65ல் வேளாண்மைக் காவியத்தை, அதன் இப்போதுள்ள வடிவத்தில், அவர் எழுதிமுடித்து விட்டார் என்று நினைக்கிறேன். அதைத் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற ஆர்வமும் அக்கறையும் அவருக்கு இருந்தது. ஆயினும் 1975ல் அவர் மரணிக்கும் வரை இருந்த பத்தாண்டுகால இடைவெளியில் அவர் அதை நிறைவுசெய்யவில்லை. அதற்கான அகத் தூண்டல் அவருக்கு இருக்கவில்லை என்றே இப்போது எனக்குத் தோன்றுகின்றது. இப்போது இருக்கும் வடிவிலேயே அது நிறைவு பெற்றுக் காணப்படுவதும், பண்பாட்டுக் கூறுகளைப் பதிவுசெய்வது என்பதற்கு மேல் அதை மேலும் வளர்த்துச் செல்வதற்கு அவசியமான கதைப்பின்னல் அவருக்குள் தயார் நிலையில் இல்லாதிருந்ததும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

எது எவ்வாறாயினும் நீலாவணனின் 'வேளாண்மை' முற்றுப் பெறாத காவியம் என்ற கருத்தே பரவலாக நிலவுகின்றது. நீலாவணன் அதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து எழுத வேண்டும் என்று எண்ணியிருந்தார் என்ற தகவலே இதன் அடிப்படை எனலாம். இத்தகவலை மறந்துவிட்டு, அல்லது இத்தகவலை அறியாத ஒருவர், இக்காவியத்தைப் படித்தால் அது முற்றுப்பெற்ற காவியம் என்றே கருதக்கூடும்.

மிக நெருங்கிய இரத்த உறவுள்ள ஒரு குடும்பத்துடன் ஏற்படும் சிறு பிணக்கும், விரைவிலேயே அது தீர்ந்து இரு குடும்பங்களும் மீண்டும் இணைவதுமே இக்காவியத்தின் கதைச் சாரம். இது குடலை, கதிர் என்ற இரண்டு பகுதிகளில் அல்லது படலங்களில் பேசப்படுகின்றது.

கந்தப்போடி, அழகிப்போடி இருவரும் உறவினர்கள். கந்தப்போடியின் தங்கை கனகம்மா அழகிப்போடியின் மனைவி. அழகிப்போடியின் தங்கை பொன்னம்மா கந்தப்போடியின் மனைவி. கந்தப்போடி தம்பதிக்கு ஒரு மகன் செல்லையா. அழகிப்போடி தம்பதிக்கு ஒரு மகள் அன்னம்மா. இருவரும் மச்சான், மச்சாள் உறவுடையவர். மட்டக்களப்புச் சம்பிரதாயத்தில் திருமண உரித்துடையவர்கள். சிறுபராயத்திலிருந்தே அன்னத்துக்கு முறை மாப்பிள்ளை செல்லையாதான் கணவன் என்பதை இரு குடும்பமும் எழுதா விதிமுறைப்படி ஏற்றுக் கொண்டிருந்தன. எனினும் இடையில் சொத்துப் பிரச்சினை தொடர்பாக கோடேறி, வழக்குப் பேசி இரு குடும்பங்களும் பிளவுபட்டிருந்தன என்பது ஒரு பின்னணிச் செய்தியாகச் சொல்லப்படுகின்றது. இந்நிலையில் அன்னம்மா பருவடைந்துவிட்டாள் என்ற செய்தியைப் பொன்னம்மா கணவனிடம் சொல்கிறாள். அண்ணன் வீட்டில் இருந்து யாரும் வந்து செய்தி சொன்னார்களா என்று கந்தப்போடி மனைவியிடம் கேட்கிறார். அவள் 'அயல் எல்லாம் சொல்லிப் போனார் ஆயினும் இங்கே ஒன்றும் வியளங்கள் இல்லை' என்று சொல்கிறாள். கந்தப்போடி கொதிப்படைகிறார். "பொன்னம்மா மறுகால்...... கொண்ணன் பொடியனைக் கேட்டுக் கீட்டு என் வீட்டுப் படியில் வந்து ஏறட்டும்? எழிய நாய்கள்!" என்று சன்னதம் எழுந்தாற் போலக் கறுவியவாறு வயலுக்குப் போகிறார்.

வயலில் வண்டிக்காரன் சாமி செல்லையனிடம் "கேட்டியா சேதி உன்றன் கிளியல்லோ சமைந்தது" என்று சொல்கிறான். அதைக் கேட்ட கந்தப்போடி மேலும் கொதிப்படைகிறார்.

*"ஆரைடா சாமி நீ போய்*
*அவனது கிளியாள் என்றாய்*
*பேரையே மாற்றி வைப்பேன்*
*பெருங்கொலை நடக்கும் இந்த*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெல்லாம் சொன்னார் நானும்
ஒருவனங்கிருந்தேன்"

என்று பெருங்குரலில் சத்தம் போடுகிறார்.

'செல்லனுக்கு
கலியாணம் பாண்டியூரில்
கணபதிப்போடி வீட்டில்
செய்யாது போனால் என்னை
செருப்பெடுத் தடிடா சாமி"

என்று சபதம் செய்கிறார்.

ஆயினும், அவரது சபதம் நீடிக்கவில்லை. அவர் வயலுக்குப் போன பின்னர் அவரது தங்கை கனகம்மா அவருடைய வீடு தேடி வந்து மனைவி பொன்னம்மாவிடம் சேதியைச் சொல்கிறாள்.

"மற்றவர்க்கு எம்
கருமங்கள் செய்யும் பெத்தா
கண்ணியை விட்டு சொன்னோம்
உரிமைக் காரருக்கு மட்டும்
ஒருத்தி நான் 'சொல்ல வந்தேன்'

என்று சொல்கிறாள்.

அதுதான் கந்தப்போடியின் எதிர்பார்ப்பும். அத்தோடு அவரது வீம்பும் பகையும் முடிந்துவிடுகிறது. அன்னத்தின் பூப்பு நீராட்டல் சடங்கில் இரு குடும்பமும் இணைகின்றன. செல்லையா – அன்னம்மா திருமணம் உறுதிப்படுகின்றது. சித்திரைப் புத்தாண்டை ஒட்டி நிகழும் கூத்துக்களரியில் கந்தப்போடியும் அழகிப்போடியும் அருகருகே அமர்ந்து கூத்துப்பார்க்கின்றனர். செல்லனின் கலியாணப் பேச்சையும் உறுதிப்படுத்துகின்றனர். வேளாண்மை இவ்வாறு முடிகின்றது.

களரியின் அருகில் செல்லன்
கலியாணப் பேச்சு வார்த்தை
கிழவனைப் பாரேன்! என்று
கிள்ளினான் வடிவேல்! சாமி
களவாக எட்டிப்பார்த்தான்!
கந்தப்பர்... அழகிப்போடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலையினை அசைத்து தாளம்*
*தகர்ப்பதும் கண்டான் செல்லன்*

'வேளாண்மை'க் காவியத்தின் கதைச் சட்டகம் இவ்வளவுதான். இதற்கூடாக நவீனத்துவத்துக்கு முந்திய மட்டக்களப்புத் தமிழகத்தின் பண்பாட்டுக் கோலங்கள் சிலவற்றை இழைபின்னி இருக்கிறார் நீலாவணன். செல்லன் அன்னம் காதல் உணர்வு கிராமிய இயல்போடு இழையோடுகின்றது. விவசாய நடைமுறைகளுள் சூடடித்தல் விரிவாகச் சித்தரிக்கப்படுகின்றது. பூப்பு நீராட்டல் சடங்கு கவித்துவத்தோடு மீட்டுருவாக்கப்பட்டுள்ளது. சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம், தேர் இழுத்தல், கூத்துக்களரி என்பன உயிர்ப்புடன் சித்திரிக்கப்படுகின்றன. மட்டக்களப்பின் உணவுப் பண்பாட்டை, விருந்தோம்பலை வாயூறும் அளவுக்கு விபரித்திருக்கிறார் நீலாவணன். ஒரு மானிடவியலாளன், சமூகவியலாளனின் நோக்கும் கவித்துவமும் ஒன்றிணைந்த படைப்பாக 'வேளாண்மை'யைக் கருதலாம்.

எனினும், வேளாண்மை முன்னுரையில் சண்முகம் சிவலிங்கம் குறிப்பிடுவதுபோல் "முக்கியமான திருமணச் சடங்குகள். சாவீட்டுச் சடங்குகள், மகப்பேற்று மான்மியம், மருங்கை அன்ன பிற குழந்தையின் கொண்டாட்டங்கள் என்பன விடுபட்டுள்ளன" இதே காரணத்தினால்தான் "உன் காவியம் முற்றுப்பெறாத விசனம் என்னுள் மூழ்குகிறது" என்று சிவலிங்கம் வருந்துகிறார். "உன் மண்ணின் சடங்கு சம்பிரதாயத்தை சதையும் ரத்தமுமாகக் காட்ட வந்த நீ கல்யாண விழாவைக் கோலாகலமாகக் காட்டாமல் இருப்பாயோ? மாப்பிள்ளை பெண்பார்க்கப் போவதை எவ்வளவு மௌசுபடுத்தவாய். மற்றும் சம்பிரதாயங்களை எப்படியெல்லாம் மகோன்னதப்படுத்துவாய். இன்னும் இருக்கிறதண்ணே எவ்வளவோ உன் இனிய காவியம். எப்போது இனி நீ பிறந்து எழுதப் போகிறாய் அதனை" என்று மேலும் ஆதங்கப்படுகிறார் சிவலிங்கம். அது நியாயமான ஆதங்கமே. அவை எல்லாவற்றையும் வேளாண்மை உள்ளடக்கியிருந்தால் இப்போது இருப்பதை விட அது ஒரு முழு நிறைவான வடிவத்தைப் பெற்றிருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

## 2

நீலாவணன் விட்ட இடைவெளியை நிரப்பி, வேளாண்மைக்கு ஒரு முழு வடிவத்தைக் கொடுக்க முயன்றிருக்கிறார் செங்கதிரோன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைபெயரில் எழுதும் நண்பர் கோபாலகிருஸ்ணன். இவர் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர், மட்டக்களப்புப் பண்பாட்டில் ஊறித் திழைத்தவர், இலக்கியப் பயிற்சி மிக்கவர், மட்டக்களப்பின் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் ஒருவர், நீலாவணன் கவிதைகளில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர். அது மட்டுமன்றி இன்று கவிதை எழுதுவோருள் செய்யுள் ஆற்றல் மிக்க மிகச் சிலருள் இவரும் ஒருவர். அந்த வகையில் நீலாவணனின் காவியத்தைத் தொடர்ந்து எழுதும் தகுதி இவருக்கு உண்டு என்பதில் ஐயம் இல்லை.

நீலாவணனின் 'வேளாண்மை' குடலை, கதிர் என்ற இரண்டு பகுதி களை அல்லது படலங்களைக் கொண்டது. வேளாண்மைப் பயிரின் இரண்டு வளர்ச்சிக் கட்டங்களை இச்சொற்கள் குறிக்கின்றன. எனினும் காவியத்தின் கதை வளர்ச்சியுடன் இதற்கு நேரடியான தொடர்வு இருப்பதாகக் கூறமுடிய வில்லை. குடலைப் பகுதியிலேயே சூடடித்த நெல் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடுகின்றது. கதிர்ப் பகுதியில் அன்னத்தின் பூப்பு நீராட்டும், செல்லன் - அன்னம் திருமணம் நிச்சயப்படுவதும் நிகழ்ந்து முடிகின்றன. அன்னம் - செல்லன் காதலும், பெற்றோர் முரண்பாடு அதற்குச் சவாலாக அமைவதும் காவியத்தின் முதற் கட்டம் என்ற வகையில் அதற்குக் குடலை என்ற தலைப்பும் பொருந்துவதாக நாம் அமைதி காணலாம். செங்கதிரோன் நீலாவணனின் இதே அமைப்பைப் பின்பற்றி காவியத்தின் இரண்டாம் பாகத்தை அல்லது காண்டத்தை காய், பழம் என்னும் இரண்டு படலங்களாக எழுதிப் பூர்த்தி செய்துள்ளார். காய் பகுதியில் சம்பிரதாயபூர்வமான திருமணப் பேச்சுவார்த்தை, திருமணம், திருமண சம்பிரதாயங்கள், முதலிரவு, கலவிக் களிப்பு என விரிந்து முடிகின்றது.

உதாரணமாகக் கலியாணம் கேட்டுப் போகும் சம்பிரதாயத்தை செங்கதிரோன் பின்வருமாறு விபரிக்கின்றார்

*வெற்றிலைப் பகளி, பாக்கு*
*வெண்கல வட்டாவொன்றில்*
*முற்றிய கோழிச்சூடன்*
*முழுச் சீப்பு உள்ளே எல்லாம்*
*ஒற்றைப்பட வைத்து மேலும்*
*ஒரு துண்டு மஞ்சள், தேசி*
*சுற்றியே வெள்ளைச் சீலை*
*சுமக்கின்றாள் கனகம் முன்னால்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுக்கட்டைப் பெட்டி பின்னால்
குலையோடு கோழிச்சூடன்
முழக்கட்டை போல வெள்ளை
மொந்தனும், தயிரும் காவில்,
புழக்கத்தில் உள்ள நல்ல
புழுங்கலும், தேங்காய் வேறு
வழக்கம்போல் ஊரார் நின்று
வழியிலே புதினம் பார்த்தார்

பழம் என்னும் இரண்டாம் பகுதியில் அன்னம் கருவுறுதல், குழந்தைப் பேறு அது தொடர்பான சடங்கு சம்பிரதாயங்கள் குழந்தைக்குப் பெயரிடுதல், மருங்கைச் சோறு கொடுத்தல், இவற்றின் ஊடாகக் குடும்பம் முழுநிறைவடைதல் என்பன சற்று விரிவாக விபரிக்கப்படுகின்றன. பத்துமாதக் கரு வளர்ச்சி, பிரசவம், முப்பத்தியோராம் நாள்வரை குழந்தை – தாய் பாரமரிப்பு, முப்பத்தோராம் நாளில் நடைபெறும் மருங்கைச் சடங்குகள் - குழந்தையின் தலையில் தேங்காய்ப் பால் தப்பி முடி இறக்குதல். மருத்துவிச்சி, கட்டாடி, அம்பட்டன் ஆகியோருக்கு அன்பளிப்புச் செய்தல் - போன்ற விபரங்களால் இப்பகுதி நிறைந்துள்ளது. உதாரணமாக முடி இறக்கும் நிகழ்ச்சி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

கும்பமும் விளக்கும் வைத்து
குழந்தைக்குத் தேங்காய்ப்பாலை
செம்பிலே எடுத்து அன்னம்
சிரசிலே அள்ளித் தப்ப
எம்பிய பிள்ளை தோளில்
இதமாகச் செல்லன் தட்ட
அம்பட்டன் நேரம் பார்த்தே
அழகாக வழித்தும் விட்டான்.

முடியினை இறக்கி வெந்நீர்
முழுகவும் வார்த்துப் பிள்ளை
மடியினில் வைத்து அன்னம்
மகிழ்ந்தனள் புதிய சட்டை
வடிவென வந்தோ ரெல்லாம்
வாய்விட்டுச் சொல்ல பெத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதென வந்தாள் துப்பி
கண்ணூறும் கழித்துவிட்டாள்

தன் காவியத்தை பின்வருமாறு முடிக்கிறார் செங்கதிரோன்.

*விளைச்சலால் வீடு பொங்கும்!*
*விருந்தினால் உறவு தங்கும்.!*
*களிப்புற மக்கள் மண்ணில்*
*கருமங்கள் ஆற்றி என்றும்*
*செழிப்புறச் சேர்ந்து வாழ்வர்!*
*சேமமே எங்கும் தங்கும்!*
*விளைச்சலை வேண்டி என்றும்*
*வேளாண்மை செய்து வாழ்வோம்!*

இவ்வகையில் நீலாவணனின் வேளாண்மையும் செங்கதிரோனின் விளைச்சலும் நவீனத்துவத்துக்கு முந்திய மட்டக்களப்புத் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தை நமக்குத் தருகின்றன எனலாம். இச்சித்திரம் யதார்த்தமான கிராமியப் பண்பாட்டுப் படிமங்கள் மூலம் விரிகிறது. இதில் வரும் மனிதர்கள் உண்மையான கிராமிய மனிதர்கள். அவர்களையும் அவர்களின் பண்பாட்டையும் விபரிப்பதே நீலாவணன், செங்கதிரோன் இருவரதும் அடிப்படை நோக்கம் என்று தெரிகிறது. தங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பெருமிதத்தோடு பதிவு செய்வதற்குக் காவிய வடிவத்தை இருவரும் தெரிவு செய்திருக்கிறார்கள். இதுவே இக்காவியத்தின் பலம் எனலாம். அதற்குமேல் ஒரு வாழ்க்கைத் தரிசனத்தை, ஒரு சமூகப் பரிமாணத்தை நாம் இதற்குள் தேடமுடியவில்லை. இதுவே இதன் பலவீனம் எனலாம்.

வேளாண்மை, விளைச்சல் இரண்டையும் ஒருவகையில் பாரதிதாசனின் குடும்பவிளக்குடன் ஒப்பு நோக்கத் தோன்றுகின்றது எனக்கு. இரண்டுமே காவிய வடிவத்துக்கு வேண்டிய இறுக்கமான கதைக் கட்டுக்கோப்பு அற்றவை. தொடர்ச்சியான சம்பவக் கோவையால் பின்னப்பட்டவை. பாரதிதாசனுக்கு ஒரு இலட்சியக் குடும்பத்தை உருவாக்கிக் காட்டும் ஒரு போதனை நோக்கம் இருந்தது. நீலாவணனுக்கோ செங்கதிரோனுக்கோ சம்பவக் கோவை மூலம் பழைய பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதைத் தவிர வேறு போதனை நோக்கம் எதுவும் இல்லை.

எது எவ்வாறாயினும் செங்கதிரோனின் முயற்சி பாராட்டத்தக்கது. நீலாவணன் என்ற ஒரு பெரும் கவித்துவ ஆளுமையின் பூர்த்தியடையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு என்று கருதப்படும் 'வேளாண்மை'க் காவியத்தைப் பூர்த்தி செய்ய முயன்று அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார். வேளாண்மையில் காணப்படும் நீலாவணனின் நடையையும் கவித்துவத்தையும் தன் விளைச்சலிலும் பேண முயன்றிருக்கிறார். நீலாவணன் வேளாண்மையைத் தொடர்ந்து எழுதியிருந்தால் அது எத்தகைய முழுமையைப் பெற்றிருக்கக் கூடும் என்பதை நம்மால் இப்போது கூறமுடியாது. ஆனால், அதை தன்போக்கில் முடிவுசெய்து அதற்கு ஒரு முழுவடிவத்தைத் தந்திருக்கிறார் செங்கதிரோன். அவ்வகையில் அவர் நம் பாராட்டுக்கு உரியவர்.

நீலாவணனின் வேளாண்மையை மறந்துவிட்டும் நாம் செங்கதிரோனின் விளைச்சலைப் பார்க்கலாம் "ஆசை பற்றி அறையலுற்றேன்" என்று கம்பன் அவையடக்கமாகக் கூறினாலும் கம்பராமாயணம் எப்படி அவனுடைய சொந்தப் படைப்பாகிறதோ அப்படியே இது செங்கதிரோனின் சொந்தப் படைப்புமாகும். வேளாண்மை அதைத் தொடர்வதற்கான ஒரு ஆதர்சமாக மட்டுமே அவரைப் பொறுத்தவரை அமைந்துள்ளது. விளைச்சலில் வரும் பாத்திரங்களும் சம்பவங்களும் வேளாண்மையின் தொடர்ச்சியே எனினும், அவை அனைத்தும் செங்கதிரோனின் சொந்தக் கற்பனையின் விளைச்சலே. அதன் வெற்றியும் தோல்வியும் அவருக்கே, உரியது.

எம்.ஏ.நு·.மான்

10.11.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலி – 03



கவிஞர் சண்முகம் சிவலிங்கம்

**மறுபோகத்துக்குக் காத்திருக்கும் மண்**

இதோ செங்கதிரோனின் 'விளைச்சல்' குறுங்காவியம் என் கண்முன். அது நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி எனக் கவிஞர் கூறுகிறார்.

'விளைச்சல்' குறுங்காவியத்தின் கருப்பொருள், தொடுப்பு, கதையாடல், மொழியாடல், பாத்திரப் படைப்பு எல்லாவற்றையும் காண்கிறேன். அவைகளுக்கு அப்பால் வேறுசில விஷயங்களையும் காண்கிறேன். எல்லாவற்றையும் சொல்ல இடம் இருக்குமோ என்றும் சந்தேகிக்கிறேன்.

வேளாண்மையின் கருப்பொருள்தான் விளைச்சலின் கருப்பொருள் என்பது கவிஞரின் உட்கிடை. விளைச்சல் வேளாண்மையின் தடயத்தைக் கொண்டுள்ளது உண்மையே. எனினும் கேட்டுப்போதல், கலியாணம், மகப்பேறு ஆகியவை தொடர்பான சடங்கு சம்பிரதாயங்களை மட்டுமே தொட்டுச் செல்லக் காண்கிறேன்.

வேளாண்மையின் தொடுப்பு (Plotting) non linear - குறுக்குமறுக்கானது. மோதலும் முரண்களும் உள்ளது. எனினும் விளைச்சலின் தொடுப்பு Linear - நேரானது. சுபமானது. சுலபமானது. முரண்கள் அற்றது. மோதல் அற்றது. தொடுப்பின் உள்ளோட்டம் குறைவு. சகலதுமே வெளியோட்டமாக வெளிப்படையாக உள்ளது.

கதையாடல் (Narrative) பெரும்பாலும் நேரடியான கூற்றுக்களாக உள்ளன. நாடகப்பாங்கு குறைவு. பின்னோக்கல் இரண்டொன்று மாத்திரம்.

மொழியாடல் என்னும் பதத்தில் வடிவம்(உருவம்), உருவகித்தல், உருவகம், சொல்உருக்கள், சொற்தேர்வு போன்ற பல விடயங்களைக் கருதுகிறேன்.

விளைச்சலின் பிரதான மொழிவடிவம் அல்லது உருவம் அறுசீர்விருத்தம். சிறிய அறுசீர் விருத்தத்தைப் பரவலாகவும் பெரிய அறுசீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தத்தை இரண்டொரு இயல்களிலும் உபயோகித்து இருக்கிறார். முதற்சீரும் நான்காம் சீரும் காய்ச்சீர்களாக அமைய ஏனையவை மாச்சீர்களாய் அமையும் சந்தத்தைக் கொண்டது சிறிய அறுசீர்விருத்தம். முதல் நான்கும் காய்ச்சீர்களாகவும், ஐந்தும் ஆறும் மாச்சீராக அமையும் சந்தத்தைக் கொண்டது பெரிய அறுசீர் விருத்தம்.

விளைச்சல் காவியத்தின் உருவத்தைப் பொறுத்தவரை செங்கதிரோனின் முதல்வெற்றியும் முக்கியமான வெற்றியும் அறுசீர் விருத்தத்தை வாலாயமாக்கிக் கொண்டதே. 'கம்பன் வீட்டுத் தறியும் கவிபாடும்' என்று சொல்வார்களே, தறியின் ஒத்திசைவு கம்பனின் பாக்களில் உள்ளது என்று பொருள் கொள்வதா, அல்லது தறி தன் ஒத்திசைவை கம்பனின் பாக்களிலிருந்து பெற்றுக் கொண்டது என்று பொருள் கொள்வதா? கம்பனது பாக்களின் ஒத்திசைவை கேட்டுக் கேட்டு தறி தன் ஒத்திசைவைப் பெற்றுக் கொண்டது என்ற பொருளைத்தான் கொள்கிறேன். செங்கதிரோனின் விருத்தப்பாக்களைப் படிக்கும்போது செங்கதிரோன் வேளாண்மையின் அறுசீர்விருத்தப் பாக்களை படிக்கபடிக்க அவற்றின் சந்தம் ஒரு ஆவிபோல் செங்கதிரோனுள் புகுந்துகொள்ள யாப்பைச் சற்றுப்பரிசீலித்துப் புரிந்து கொண்ட ஏகலைவனாகத்தான் செங்கதிரோன் இந்த வித்தையைக் கற்றுக் கொண்டார் என்று நினைக்கின்றேன். சிறந்த மொழியாட்சியைக் கொண்ட வராகக் காணப்படும் செங்கதிரோனுக்கு இது எளிதில் கை கூடியது வியப்பில்லை.

வேளாண்மையில் ஆறுவகையான சந்தங்கள் உண்டு என நினைக் கிறேன். அவைகளில் இரண்டை செங்கதிரோன் விளைச்சலில் உருப் போட்டிருக்கிறார். மேலும், வேளாண்மையின் 273 அறுசீர்விருத்தங்களுடன் விளைச்சலின் 145 விருத்தப்பாக்களை வைத்துப் பார்க்கும்போது அண்ணனின் தோளுக்கு இன்னும் ஒரு அடிதான் வளரவேணும் எனத் தம்பி குதூகலிப்பதைப்போல்தான் உள்ளது எனக்கு. இது ஒரு முக்கியமான சாதனை மட்டுமல்ல இன்னும் சாதிப்பதற்கு பாதையைத் திறந்துவிட்ட சாதனையாகும்.

உவமை, உருவகம், குறியீடு, உருவகிப்பு, படிமம் ஆகியவை சார்ந்த விளைச்சலின் உருவகமொழி தொடர்பாய் சற்று விரிவாகச் சொல்ல வேணும் போலிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்து உவமைகள் ஒரு பக்கத்தை நிறைக்குமோ அறியேன்.**

1. பார்வதிப் பெத்தாவோடு
பள்ளயம் பார்க்கப்போன
நேரத்தில் நீயும் அத்தான்
நிழல் போல பின்னே வந்தாய்

2. நேசத்தால் நெஞ்சமெல்லாம்
நெய்யைப்போல் உருகநின்றார்.

3. அன்னமோ அறையின் உள்ளே அணங்கென அழகுக்கோலம்

4. பூ ஒன்று நகர்ந்தாற்போல.... அன்னப்புள் நடையில் செல்லன்
அருகிலே வந்து நின்றாள்.

5. புன்னைப் பூ சொரிந்தாற்போல
பொண்டுகள் முறுவல் பூத்தார்.

6. செந்தளிர் மாவிலை போல்
சிவந்தனள், சிலையைப்போல
வந்தனள் கூறை மாற்றி.

7. சங்குக் கழுத்தில் சரமெனவே கை கோர்த்து

8. முழுமதி தினத்தில் அன்று
முகில்இலா வான்பரப்பில்
எழுகிற நிலவைப்போல
எழில்கொளும் மகளை...

9. குருத்தோலை போலும், கன்னிக்
குலை ஈன்ற தென்னையாக
உருத்தோற்றம் உடைய அன்னம்.

10. பின்னியுடல் பாம்பிரண்டாய் பிணைந்தார்கள்

இவைகளில் பல மரபுரீதியான உவமைகள் என்று சிலர் சொல்லக்கூடும். எனினும் 8ம், 9ம் உவமைகள் போன்றவை நம்முள் புதிய கோலங்களை ஏற்படுத்துகின்றன என்பதும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகங்களிலும் ஒரு பத்தை அள்ளிக் கொள்கிறேன்.

1. காதல்வெறி கரைபுரள

2. விரிமார்பில் மென்விரல்கள் வீணைமீட்ட

3. மலரிதழில் ஊறிவரும் மது

4. இன்ப வெள்ளம் பீறிப்பாய

5. முற்றிப் பழுத்த கனியின் முழுச்சாறு பற்றி இதழின் வழி பறித்து

6. கன்னியவள் சொர்க்கத்தின் கதவுகளை திறந்துவிட்ட களிப்பிலுற்றாள்

7. வேலி இடவில்லை விரல்கள்

8. குழைந்தாள் நிலா

9. தங்கக்குடங்கள் தழுவினான்

10. பார்வதி பெத்தா நெஞ்சில் பால் பொங்கி வழிய

மொழி உருக்கள் (figures of speach) பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன தமிழ் இலக்கியத்திலும் நன்றாகவே இடம் பிடித்துள்ளன. சிலேடை (Pun), அங்கதம் (Satira) தமிழ் பதங்களே. தற்காலத்தில் முரணியல் (Paradox), முரண்நகை, (Irony), நகைச்சுவை (Humour) ஆகியவை பற்றியும் பேசப் படுகின்றன. எனினும் இவற்றைப் பொதுப்படச் சுட்டுவதற்கு உள்ள (அல்லது இல்லாத) தமிழ்ப் பதத்திற்காக மொழியுருக்கள் என்ற பதத்தைப் பயன் படுத்துகிறேன். ஆங்கிலப் பதங்களோடு இவற்றை ஒப்பிடுவதில் யாரும் அசூசைப்படவேண்டியதில்லை. மரபார்ந்த தமிழ்மொழி ரீதியாக தற்காலத் தமிழ் பெரியவளம் பெற்றதாகவும் சொல்லமுடியாது. மணிப்பிரவாளம் அன்றும் இன்றும் தவிர்க்கமுடியாததாகவே உள்ளது. அதனால் கன்னித்தமிழ் தன் கன்னிமையை இழக்க வேண்டும் என்பதும் என் கருத்தல்ல. நானும் தனித்தமிழ்தான். தேவையானபோது கடன்வாங்கி தமிழ் மயப்படுத்துகிறேன்.

விளைச்சலில் கேலிக்கும் கிண்டலுக்குரிய சிலேடை, அங்கதம், முரணியல், முரண்நகை போன்றவை காணப்படாதது வியப்பல்ல. இவைகளை விளைச்சல் போன்ற கருத்துமோதல் அற்ற, எல்லாம் சுபமாய் முடியும் ஒரு படைப்பில் காண்பது அரிது. வேளாண்மையில் அவை நிறையக்காணப்படுவது வேறு விடயம். நீலாவணனே அங்கதமும், முரண்நகையும், முரணியலும் கலந்த ஒரு ஆளுமைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் நகைச்சுவை விளைச்சலில் நன்றாக விளைந்துள்ளது. விருந்துகளில் மது உபசாரங்கள் நகைச்சுவை உபசாரங்களாக மாறுகின்றன.

i. மடியவீழ்ந்து வேட்டி வீழ மாணிக்கம் ஆடுகிறான்.

ii. தொந்தி வயிறுடையான் துரைசிங்கம் அண்ணாவி குந்தி
வருகையினைக் கூத்தாடிக்காட்டுகிறான்.

iii. ............. சாமி
அறையொன்றுள் போய் அளவாய்
அனுக்கினான் சற்றுப்பின்னர்
மறைவாக மற்றொன்றை தன் மடிக்குள்ளே கட்டிவந்தான்.

iv. வடிவேலும் விடுவானா போய்
வார்த்துவிட்டு வந்துநின்றான்
அடிசக்கை அமர்க்களம்தான்
அவனும்தான் ஆடுகின்றான்.

v. உப்பென்று கேட்டார்கள்
உறைப்பெங்கே மற்றொருவர்
தப்பாமல் தம்பிக்கு வை
தயிர்சீனிபோடு தங்கம்
அப்பாடா நல்ல வெட்டு ....ஆ
ஆணத்தில் கொஞ்சம் ஊத்து.

பாத்திரப்படைப்புக்கு வருகிறேன். விளைச்சல் காவியத்தின் சம்பவங்கள் மேலோட்டமானவை. நடைமுறையில் உள்ள வெறும் பொதுவான சம்பிரதாய நிகழ்வுகள். இந்த நிகழ்வுகளுக்கு ஒரு கதைப் பின்னணியைக் கொடுப்பது, வேளாண்மைக் காவியத்திலிருந்து பெறப்பட்ட கதாபாத்திரங்களே.

எனினும் வேளாண்மைக் கதாபாத்திரங்கள் விளைச்சலில் சில மாறல்களைக் காட்டுவதும் தவிர்க்கமுடியாததே. வேளாண்மையில் உள்ளதுபோலவே விளைச்சலிலும் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது பார்வதிப் பெத்தாவின் பாத்திரம். வேளாண்மையில் உள்ளதைவிடவும் வெளிப்பாக உள்ளது அன்னம்மாவின் பாத்திரம். திரிந்து போய் இருப்பது வண்டில்காரன் சாமித்தம்பியின் பாத்திரம். மிகக் குறைந்துபோய் இருப்பது கந்தப்போடியாரின் பாத்திரம். உறைந்துபோய் இருப்பது பொன்னம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிப்போடி, கனகம்மா பாத்திரங்கள், புதிதாகப் புகுந்திருப்பது சில விருந்தாளிகள். முற்றும் மறைந்து போய் இருப்பது துறையூரின் மக்கள் பாத்திரங்கள்.

விளைச்சல் காட்டும் பார்வதிப் பெத்தாவை விளைச்சலின் சில வரிகளிலேயே விபரித்து விடலாம். ஓர்நாள் பெத்தா/என்னடீ கனகம்மா உன் / இளையவள் கலியாணத்தை / கண்ணை நான் மூடுமுன்னம் / காணத்தான் ஆசை என்றாள். மெல்லமாய் கனகம் காதில் / மென்மேலும் ஓதி ஓதி / செல்லனைக் கேட்டுப்போகச் / சிரத்தையாய் நின்று வென்றாள்.

பந்தியின் நடுவில் பெத்தா / பார்வதி வைத்தாள் சத்தம்/......... சோறெடுத்து வா சொர்ணம் / சுண்டலையும் கொண்டு வாகா/ ஆரெடுக்கப் போனா பார்/ஆட்டிறைச்சிக் கறியை தண் / ணீர் எடுத்து வை வள்ளி / நீளத்தில் பாயை விரி..... ஆலாத்தி எங்கே என்று / அவசரப்பட்டாள் பெத்தா. சரி என்றாள் பெத்தா மேலும் / சடங்கினைத் தொடரலுற்றாள்...

பெட்டையை உள்வீட்டுக்குள் / பெத்தாதான் கூட்டிப்போனாள்...

பார்வதிப் பெத்தா பார்த்து / பகிடியும் விட்டாள், பின்னர் / ஆரப்பாஅங்கே பந்தி / அலுவலைக் கவனி என்றாள்...

பந்தியை முடித்தபின்னர் / பார்வதிப் பெத்தா கொஞ்சம் / குந்தினாள் இல்லை..... / வந்தவர்க்கெல்லாம் முன்னே வட்டாவை நீட்டி நீட்டி / தந்தனள் மகிழ்ச்சியோடு / தாம்பூலம் தரித்தார் ஊரார்.

.......... கள்ளி நீ அன்னம் என்று / கத்தினாள், பின்னர் கையால் / அள்ளினாள் அன்னம்மாவை / ஆசையில் முத்தமிட்டாள்.

...... பார்வதிப் பெத்தா ஓடி / பரிகாரம் பண்ணலானாள். வேப்பிலைக் கொத்தைப் பிய்த்து / வெளியிலே காவல் போட்டாள்.

..... பெத்தா / துள்ளினாள் குமரிபோல / தூக்கியே மடியில் வைத்து / பிள்ளையைக் கொஞ்சிக்கொஞ்சிப் பேராசை தீர்த்துக் கொண்டாள்.....

.....வேர் அவள் குடும்பத்தார்க்கு / விழுதினாய் வந்த கொள்ளுப் / பேரனின் பேரை எங்கும் / பெருமையாய்சொல்லி சொல்லி / ஊரெல்லாம் வந்தாள் ஓடி / உடம்பும்தான் களைத்துப் போனாள்.

அன்னம், வேளாண்மையில் உள்ளதை விட விளைச்சலில் எப்படி வெளிப்பாக உள்ளாள் என்பதை இப்போ எண்ணுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மையில் தெரிந்த அன்னம்மா நேருக்குப்பார்த்த கண்ணை நிலத்திலே புதைத்துவிட்டு மேலுக்கு விரலால் சீய்த்து மிரண்ட........ அன்னம்மா, செல்லனின் அருகிலே மடியை மெல்ல அவிழ்த்தவல் அள்ளி அவனுக்குத் தர எடுத்தவள்தான் அன்னம்மா...., தடுக்கியே வரம்பில் சாய்ந்தவள் அன்னம்மா, செல்லன் அவளை இருகையால் தூக்கிக் கொஞ்ச இடித்தவள் அன்னம்மா, கோபமா மச்சான் என்று குறுநகைபுரிந்தவளும்தான் அன்னம்மா.

வரால்மீன் துள்ளி, பொக்கென நீரில் பாய்ந்து ஓட்டமாய் ஓட அஞ்சி ஓடியவள் அன்னம்மா, வடிவேல்வீட்டில் (செல்லனின்) சத்தத்தை மதித்தும் போலிச் சாமிபோல உள்ளே இருந்தவள் அன்னம்மா. எலுமிச்சை ஓரமாக நெஞ்சை இழந்து(செல்லனை) ஒளித்திருந்து பார்த்தவள்தான் அன்னம்மா, பாயால் தன்னை மறைத்துக் கொண்டே செல்லனின் பக்கம் பாயை வீசி, விரைந்து ஓடி வீட்டுக்குள்மறைந்தவளும்... அன்னம்மாதான்.

இவைதான் நீலாவணன் காட்டும் அன்னம்மா, செல்லனை விரும்பி யிருந்தும் அதை வெளிக்காட்டாதவள். அவனுடைய கொஞ்சலுக்கு இடர்பண்ணி இடித்தவள், செல்லனின் சத்தத்தைக் கேட்டு போலிச்சாமியாய் மௌனித்தவள், ஒளிந்திருந்து பார்த்தவள், பாயை வீசிவிட்டு ஓடிப் போனவள். (ஆக, கோபமா மச்சான் என்று அவள் குறுநகை புரிந்த அன்றுதான், அவளுடைய நேரடியானது) ஆக, அவள் வேளாண்மையில் ஒரு கொத்துக்குள் மாம்பழம் வோட்ஸ் போர்த்தின் லூசி போல (A Violet half hidden by the rossy stone)

ஆனால் விளைச்சலில் அவள் மறைந்திருந்து பேசும் ஒரு காதலி, சமைந்து இரண்டொரு ஆண்டுகள் கழிந்த பின் - இது அவளுக்கு இயல்பே - பின்னோக்கலாக அவள் தனக்குத்தானே பேசுகிறாள் எனினும், அது ஒரு மனம்திறந்த பேச்சே. வாசகரைப் பொறுத்தவரை அவளை வாசகர் கூடுதலாக அறியக்கூடியதாக உள்ளது.

"சத்தியம் அத்தான் உன்னைச் சந்திக்க ஆசை ஆனால்
உத்தமம் இல்லை. நாளை ஊர்வாயை மூடலாமோ?"
"ஊர்வம்பு சொல்லுமென்றே உன்னோடு பேசவில்லை."
"தாலிக்கு நாளைப் பார்த்து தவித்தாளே இந்த அன்னம்."

எனினும் இது ஒரு சிறு நீக்கல்தான். இந்த நீக்கலைத்தவிர அன்னத்தை விளைச்சலில் தனித்துவமாகக் காணமுடியவில்லை என்பதும் உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தைப் பொறுத்தவரை நீலாவணனின் "சந்தணத்தை கடைந்து சிற்பி சமைத்தெடுத்த மாரியம்மன் சிலை" என்பதற்குள்ளேயே செங்கதிரோன் அடங்கிவிட்டார் போன்றும் தெரிகிறது.

மற்றவை எல்லாம் வழமையான தோற்றங்களும் மாற்றங்களும்தான். எனினும் அன்னம்மாவின் உருவப் பொலிவை அவளுடைய உணர்ச்சி நிலைகளுடன் காட்ட செங்கதிரோன் பெரிதும் முயன்றுள்ளார் எனலாம்.

வண்டில்கார சண்டியன் சாமித்தம்பி விளைச்சலில் எவ்வாறு திரிந்து போனான்... என்பது அடுத்த கேள்வி. சாமி பற்றிய விளைச்சல் வரிகள் விடை பகர்கின்றன.

1. மாப்பிள்ளை செல்லனோடு / மகிழ்ச்சியில் நின்ற சாமி / கூப்பிட்ட சத்தம் கேட்டு / குதித்தோடி வந்தான். கந்தர் / ஏற்பாட்டை பார் என்றோத ஏகினான் உள்ளே, லிக்கர் / ஷாப்பிலே வாங்கி வந்த சரக்கொன்றைத் தூக்கி வந்தான்.
2. அறையொன்றுள் போய் அளவாய் / அனுக்கினான். சற்றுப்பின்னர் / மறைவாக மற்றொன்றைத் தன் / மடிக்குள்ளே கட்டிவந்தான்.
3. சந்திக்கு போன சாமி / சாராய வெறியில் மீண்டான்
4. கூப்பாடு போட்டான் சாமி / குடிவெறியில் கூச்சலிட்டான்.
5. என்னடா இளையபோடி இன்னுமா ஒன்றுமில்லை / அன்னம்மா வயிற்றில் இன்னும் அடையாளம் காணோம் என்று / பொன்னம்மா பொருமுகின்றாள். பொடிச்சியின் நிலைமை என்ன?
6. சாமியோ விட்டான் இல்லை / சாராய வெறியில் நின்று / பூமியில் தள்ளம்பாறி / புழுதியில் விழவும் பார்த்தான்.
7. காலையில் இருந்தே சாமி / கணக்காகப்போட்டுக் கொண்டான். / வேலைக்கு ஆள்தான் கந்தர் / விருந்துக்குப் பொறுப்பாய் விட்டார் / சாலையில் போனோர் எல்லாம் / சாமியை பார்த்து வேலி / ஓலைக்கு மேலால் எட்டி / உன்பாடு ஓகோ என்றார்.

விளைச்சலில் வரும் வண்டில்கார சண்டியன் சாமித்தம்பி இவ்வளவுதான். வேளாண்மையில் வரும் சண்டியன் சாமித்தம்பி பற்றி சொல்ல எவ்வளவோ இருக்கிறது. இங்கு இடமும் இல்லை. பொருத்தமும் இல்லை. சாமி வேளாண்மையில் கதையோடொட்டிப்பெறும் அதிமுக்கியமான பாத்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சலில் பெற முடியவில்லை. விளைச்சலில் அவன் வெறும் எடுபிடி ஆளாகவும் மேலாண்மை அற்ற பலவீனமான குடிகாரனாகவும் திரிபு அடைந்திருக்கிறான். விளைச்சலில் கேட்டுப் போவதும் பதிலுக்குப் போவதும் சம்மிரதாய வைபவங்கள்தானே. சாமியைப்போல சகலரும் குடிவெறிப் பண்பாட்டின் குதூகல சித்தரிப்புகளாக இருக்கும் போது சாமிக்கு வேறென்ன வேலையும் விசேடமும் கொடுக்கமுடியும் விளைச்சலில் செங்கதிரோனால்!

கந்தப்போடியின் பாத்திரம், திறந்த சோடாப் புட்டியாய் காரம் குறைந்து போனதுதான் பரிதாபம். வேளாண்மையின் ஆரம்பத்தில் பல எதிர்பார்ப்பு களைத் தந்து கதைமுரணின் காலாகத் தோன்றிய கந்தப்போடி எந்த ஊசலாட்டமும் இல்லாது, இலக்குத் தவறி கரைந்துபோன ஒரு பாத்திரம். இவ்வாறு வேளாண்மையிலேயே குறையத் தொடங்கிய கந்தப்போடியின் பாத்திரம் விளைச்சலில் மேலும் குறைவடைந்து அழகிப்போடியின் சாயலுக்குத் தள்ளப்படுகிறார். வேளாண்மையில் நாசூக்காகவும், நயந்தும், உவந்தும், நறுக்கென வெட்டி ஒட்டிப் பேசியும், உற்சாகமே உருவானது போல தோன்றிய பொன்னம்மா கூட விளைச்சலில் அழகிப்போடி, கனகம்மா போன்ற சம்பிரதாய பூர்வமான பெற்றோர் பாத்திரமாக மாற்றப்பட்டுள்ளனர். முரண் அறுந்து போன கதையில், அவர்கள் வேறுவிதமாய் இருக்க முடியாது போலும். பார்வதிப் பெத்தா வேளாண்மையிலேயே அன்னம் செல்லன் கலியாணத்திற்காகச் சார்பு கொண்டுவிட்ட முரண்நிலை பாத்திரம். அந்த முரண் பார்வதிப் பெத்தாவை கடைசிவரை இயக்க விளைச்சல் அனுமதிக்கிறது. அதே சார்பு நிலை கொண்ட சாமி கதை முரண்தவறிய காரணத்தால் இடமில்லாமல் போய்விட்டது.

வேளாண்மை காட்டும் ஊர்முகங்கள் விளைச்சலில் தொடர்ந்து காணப் படவில்லை. வேளாண்மை பெரும் பரப்பை தவிர்த்து இரண்டு குடும்பங் களின் உறவை மாத்திரம் கருத்தில் கொண்ட விளைச்சலுக்கு பரந்த பிரதேசப் பின்னணியும் பரந்த மக்கட் கூட்டமும் அவசியப்படவில்லை.

அப்படியானால் விளைச்சலை வேளாண்மையின் தொடர்ச்சி என்று சொல்லலாமா என்ற கேள்வியும் எழுகிறது. அல்லது எந்த அளவுக்கு விளைச்சல் வேளாண்மையின் தொடர்ச்சியாக உள்ளது என்ற கேள்வி யாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் இப்போது நாம் பாத்திரப்படைப் பிலிருந்து பிரிந்து வேறு பிரதேசத்துக்குள் புக வேண்டியுள்ளது.

விளைச்சல் வேளாண்மையின் தொடர்ச்சி என்றால் வேளாண்மையின் தொடுப்பை (Plotting) விளைச்சல் தட்டிக் கழிக்கமுடியாது. வேளாண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தொடுப்பு கதைமுரணை அடிப்படையாகக் கொண்டது. கதைமுரண் என்பது கதையை இயக்கும் எதிர் எதிர் சக்திகளின் மோதல். வேளாண்மை யினது கதை முரணின் ஆரம்பப்புள்ளியாக கந்தப்போடி - அழகிப்போடியின் பகைமுரண் இருந்தது. அன்னம்மா சமைந்த செய்தி உரிய காலத்தில் உரியமுறையில் வழங்கப்படாததால் நீறு பூத்த நெருப்பாகவிருந்த பகைமுரண் புகையத் தொடங்கியது. அந்தப் புகைச்சலே கதையின் விறுவிறுப்புக்கும் தூபமிட்டது. அந்த புகைச்சல் சுவாலை ஆவற்கு முன் நீலாவணனின் மரணம் நேர்ந்தது. கனன்று கொண்டிருக்கக்கூடிய அந்த சுவாலையில் நீர் ஊற்றுவதுபோல நீலாவணனின் மரணத்தின்பின் அவர் கடைசியாய் எழுதிய "கதிர்"பாவில் ஒரு இடைசெருகலும் புகுந்தது. எனினும் அன்னம் சமைந்த தண்ணீர் செலவுக்குப் பின்னும் அன்னம் - செல்லன் தொடர்பை விரும்பவில்லை. அதனால்தான் வேட்டைக்குச் செல்லனைக் கூட்டிப்போன வடிவேல்சாமியின் கூட்டை வெறுத்து "வடிவேலைக் கண்டு நாலு வார்த்தை சொல்லாமலுக்குக் குடியேன் நான் தண்ணீர், அந்தக் கூட்டத்தால் வந்ததெல்லாம் கடவுளே என்றார் கந்தப்போடியார் கவலையோடு"

வேளாண்மையின் மற்றுமோர் கதைமுரண் செல்லனின் முறைமச்சாளும் காதலுக்குரியவளுமான அன்னத்தின் மீது கண்ணமுத்துடையான் பெற்ற கணபதிப்பிள்ளைக்கு இருந்த கண்! இதைத் தன்நினைவுகள் குதிர்தலில் முதலில் வெளிப்படுத்தியவள் பார்வதிப்பெத்தா. அடுத்து வெளிப்படுத்தியவன் சந்தி வம்மியின் கீழ் தாயமாடிய வீமன் (செல்லையா என்றால் சிம்ம சொப்பனம் கணபதிக்கு பொல்லாத போட்டி அந்த பொடிச்சி அன்னம்மாவோ) மூன்றாவதாக இந்த முரண்வெளிப்படுவது, அன்னம் சமைந்த தண்ணீர் செலவின் போது கலந்து கொண்ட உடையாரின் மனைவிக்கு பொன்னம்மா காட்டும் வெறுப்பினால்

*"மனதுக்குள் இவள் என்ன மச்சிமுறை கொண்டாட மஞ்சள் ஊற்றி*
*தனகவந்தாள் போலும் என பொன்னம்மா முகமோடி கறுக்கலாச்சு"*

வேளாண்மை கதையை இயக்கிய மூன்றாவது முரண் வன்னிய தெருவாருக்கும் உடையார் தெருவாருக்கும் இடையே நிலவிய போட்டி பொறாமையாகும்.

சித்திரை வருஷத்துக்கு தேர்செய்து சுற்றுவதில் மட்டுமில்லாது பொதுவாகவே இரு சாராருக்குமிடையில் காழ்ப்பு, இந்தக் காழ்ப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையை ஊர் மட்டத்தில் அல்லது சமூக மட்டத்தில் கொண்டு செல்ல உதவுகிறது.

வேளாண்மையின் இந்தக் கதை முரண்களை ஒப்புக் கொள்வது போல அமைகிறது. "நீலாவணன் காவியங்கள்" நூலுக்கு எழில்வேந்தன் எழுதிய பதிப்புரை

"இக்காவியத்தின் பிந்தியகதை நீலாவணனால் எழுதப்பட்டிருப்பின் செல்லன் அன்னம் திருமணச்சடங்கும், அதனுடன் தொடர்புபட்ட சடங்குகளும், பெரியநீலாவணைக் கிராமத்தின் பேச்சியம்மன் மற்றும் விஷ்ணு கோவில் திருவிழாக்கள், பிள்ளைப் பேறும் அதனுடன் தொடர்புடைய சடங்கு சம்பிரதாயங்கள், அன்னத்தை திருமணம் செய்ய முனைந்து தோற்ற உடையாரின் மகன் கணபதிப்பிள்ளையின் குழப்படிகள், அவன் மருந்து மந்திரம் செய்தல், அதனால் செல்லன் அன்னத்தைப் பிரிந்து வேறொரு பெண்மையலில் வீழல், பின் அவன் திரும்பி வருதல், பார்வதிப் பெத்தாவின் சுகவீனம், ஆயுர்வேத மருத்துவமுறைகள், பெத்தாவின் மரணம், அதனுடன் தொடர்புடைய சடங்கு சம்பிரதாயங்கள், பொங்கல், கதிர்காமத்துக்கு கால்நடைப்பயணம் என பலபல செய்திகளைக் கொண்டு வந்திருக்கும்"

வேளாண்மையின் கதை நேர்த்தியான கதைமுரண்களை கொண்டமைந்தது என்பது தெளிவு. இந்தக்கதை முரண்களில் சிக்குப்பட செங்கதிரோன் விரும்பவில்லைப்போலும். வேளாண்மை போன்ற ஒரு பாரப்பட்ட கதைப்புலத்தைச் செங்கதிரோன் போன்ற ஒரு ஏகலைவன் ஏற்கத்தயங்கியதும் ஆச்சரியம் அல்ல. அவர் ஏற்றுக்கொண்டு செய்ததே பெரும்சாதனை.

செங்கதிரோன் செய்ததும் செய்யாததும் இப்போது புலனாகிறது. அவர் செய்துள்ளது 'வேளாண்மை'த் தொடர்ச்சியின் முதலாவது பகுதி எனலாம். இரண்டாவது மூன்றாவது பகுதிகளுக்கான வெளியும் இருக்கிறது. இந்த வெளியை நிரப்பப் போவது யார் என்ற கேள்வியும் உள்ளது. வேறு யார்? சாட்சாத் செங்கதிரோனே அதையும் செய்ய வேண்டும்.

இன்றைய நிலையில் வேளாண்மையை மேலும் தொடர்வதற்கு வேறுயாரும் இல்லை. விளைச்சலைப்படைத்த செங்கதிரோனின் சிந்தனையும், கற்பனையும், உணர்வும், உள்ளமும் வேறு யாருக்கும் வரப்போவதில்லை. விளைச்சலுக்காக அவர் வாலாயப்படுத்திய அறுசீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம் அவருடைய முதலாவது பலம். பாத்திரங்களின் உணர்வுகளை நுட்பமாக வெளிப்படுத்தக்கூடிய திறனும் அவருக்கு அத்துப்படி. மட்டக் களப்பின் மொழிவழக்கு அவருடைய கைவசம். இப்பிரதேசத்தின் சடங்கு சம்பிரதாயங்களுடன் நீலாவணனுக்கிருந்த பிறவித்தொடர்பு அவருக்கும் உண்டு. நீலாவணனின் புனைவுத்திறன் மட்டுமே செங்கதிரோனுக்கு புரியவேண்டி உள்ளது. விடுபட்ட தடயங்களை இரண்டொரு பின்னோக்கல் களினால் மீட்டுக் கொண்டே அவர் புதிய போகத்தை ஆரம்பிக்கலாம்.

ஆகவே தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பாக நான் செங்கதிரோனிடம் வேண்டிக் கொள்வது. வேளாண்மைக் காவியத்தின் தொடர்ச்சியான விளைச்சலின் மீதிப் பகுதிகளையும் தயவு செய்து படையுங்கள். மறுபோகத்துக்காக மண் காத்திருக்கிறது.

(சண்முகம் சிவலிங்கம்)
பிரகஷ்த்தம்
பாண்டிருப்பு - 02, கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலி – 04



பேராசிரியர் சி. மௌனகுரு

தமிழ் மொழிக்கு ஒரு காவிய மரபு உண்டு. காவியம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற மரபை உடைத்துப் புதுக் காவியமான பாஞ்சாலி சபதம் தந்தவன் பாரதி. அவன் கூற்றின்படி காவியம் என்பது எளிய பதங்களில் அமைந்திருக்க வேண்டும். ஓரிரு வருடத்து நூற்பழக்க முள்ளவர்களும் விளங்கிக் கொள்ளவேண்டும். காவியத்திற்குரிய நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும். இங்கே அவன் சாதாரண சனங்களையும் இலக்கியத்தின் உயர் நிலையையும் இணைக்கிறான். அவன் வழியில் பின்னால் சிலர் நவீன காவியங்கள் எழுதினர். நீலாவணனும் அவர்களுள் ஒருவர். நீலாவணன் காவியங்கள் பற்றி அந்நூலில் காலம் சென்ற சண்முகம் சிவலிங்கம் சிறந்ததோர் முன்னுரை எழுதியுள்ளார். 'வேளாண்மை'க் காவியத்தின் கதைப்பின்னல் அதனை நீலாவணன் நடத்திச் சென்ற முறைமை பற்றி அவர் அதில் தன் கருத்துரைத்துள்ளார். கதைப் பின்னலை விட ஒரு கதைக்கூடாக, சில சம்பவங்களுக்கூடாக நீலாவணன் ஒரு பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வாழ்க்கைமுறைகள், மனித உறவுகள் என்பனவற்றைக் கொண்டு வருவதிலேயே அதிக கவனம் செலுத்தியுள்ளார் போல எனக்குப் படுகிறது. இதில் அவர் பெரு வெற்றியும் பெற்றுள்ளார்.

1931ஆம் ஆண்டில் பிறந்த நீலாவணன் 1975இல் இறக்கிறார். நீலா வணன் வாழ்ந்த காலம் வேளாண்மைச் செய்கை இயந்திரமயமாகி லாபம் தரும் தொழிலாயும் மாறிவிட்டது. ஆனால் நீலாவணன் வேளாண்மையில் எந்த இயந்திரத்தையும் காணவில்லை. சூட்டுக்களத்தில் வேலை செய்தவர் களுக்கு நெல்லே கூலியாகக் கொடுக்கப்படுகிறது. நீலாவணன் தனது சிறுவயதில் இவற்றை அனுபவபூர்வமாகக் கண்டிருக்கக் கூடும். அந்தப் பழைய கால வாழ்வை மனித உறவு கலந்து சுவைபடக் கூறுவதும் அதற்குள்ளால் வெளிப்படும் அப்பிரதேசம் சார்ந்த வாழ்வோடொட்டிய கொண்டாட்டங்களைக் கூறுவதுமே வேளாண்மையில் பிரதானமாக இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன. மட்டக்களப்பில் பல தொழில் செய்வோர் வாழ்ந்தாலும் இரு பிரதான தொழில்கள் விவசாயமும் மீன்பிடியுமாகும். இங்கு நீலாவணன் விவசாய மக்களின் வாழ்வை அதிலும் ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் வாழ்வைப் பாடுபொருளாக்கி ஏனையோரைத் துணைப் பாத்திரங்களாக்கி யுள்ளார்.

பூதங்கள் நெல்லை அள்ளிப் போகாவண்ணம் பொலி காத்தல், சூடுபோடல், களவெட்டிப் பொங்கல் வைத்தல்,கணக்குகள் தீர்த்தல் என்பன விஸ்தாரமாகப் பேசப்படுகின்றன. தான் விரும்பும் காதலியின் சம்மதத்துடன் அவள் வீட்டுக்குள் புகுந்து பின் அவளை மனைவி ஆக்கும் முறை சாராச் சடங்கு, சாமத்தியக் கலியாணம் நடத்துதல், சாமத்தியக் கலியாண வீட்டில் மச்சான் மச்சாள் மஞ்சள் தண்ணீர் ஊற்றி விளையாடல், குடித்து மகிழ்தல், தேர் இழுத்தல், கூத்தாடுதல் என மட்டக்களப்பு மக்கள் ஒரு சாராரின் முன்னைய வாழ்வு முறைகளை விவரணமாக சுவைபடக் கூறுகிறார் நீலாவணன். இப்படி ஒரு வாழ்க்கை இருந்ததா? எனப் புருவம் உயர்த்த வைக்கிறார். கம்ப காம்பீர்யத்தோடு கூறியுள்ளார் என்கிறார் வ.அ. இராசரத்தினம். குடலை, கதிர் என்ற தலைப்பில் அவர் எழுதி முடித்த காவியம் ஒரு வகையில் முற்றுப் பெற்றுவிட்ட காவியம் போலவே தோன்றுகிறது. குடலையில் தொடங்கி கதிர் வந்து வேளாண்மையும் வீடு வந்துவிட்டால் ஒரு முற்று வந்து விட்டதென்றே அர்த்தம்.

ஆனால் சம்பந்தப்பட்ட கதாநாயகன் கதாநாயகியான செல்லையா வினதும் அன்னத்தினதும் வாழ்வு முற்றுப் பெறவில்லை, அத்தோடு மட்டக்களப்பின் இன்னும் சில பண்பாட்டம்சங்களான முறையான கலியாண வீட்டுச் சடங்குகள், பிள்ளைப்பேறு பார்த்தல், பிள்ளை பெற்ற தாயாரையும் பிள்ளையையும் கவனித்தல் என்ற சடங்குகளையும் இதனோடு சொல்லிவிட வேண்டும் என்பது நீலாவணனின் வேளாண்மையை முற்றுப் பெற வைக்க நினைத்த திரு கோபாலகிருஸ்ணனின் நோக்கமாகும். வேளாண்மையோடு நிற்காது விளைச்சலும் காணவேண்டும் என்பதே கோபாலகிருஸ்ணனின் நோக்கம். வேளாண்மையின் விளைச்சல் நெல்லு என்பது போல வாழ்க்கை யின் விளைச்சல் பிள்ளைகள் என்பது ஆசிரியர் நோக்கம் போலும். திருவள்ளுவர் இல்லறவியலின் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம்., புதல்வரைப் பெறுதல் என்ற மூன்று விடயங்கள் கூறுகிறார். இந்த மூன்றும் இன்றி மானிட வாழ்வு இயங்காது என்பது அவர் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்*
*நன்கலம் நன் மக்கட் பேறு*

என்பது வள்ளுவர் குறள்!. எனவே வள்ளுவரின் வழியில் வாழ்வின் விளைச்சல் நன் மக்கட் பேறாகும் எனக் கோபாலகிருஸ்ணன் கருதியிருக்க வேண்டும். அவ்வண்ணமே அதனை முற்றுப் பெறவைக்க எண்ணினார். இதனை முற்றுப் பெறவைக்கும் அனுமதியை அவர் நீலாவணனின் மகன் எழில் வேந்தனிடம் பெற்றும் இருந்தார். கோபாலகிருஸ்ணன் 1950 இல் பிறந்தவர். நீலாவணன் பழைய தலைமுறை எனின் இவர் புதிய தலை முறையினர். நீலாவணனின் காலம் வேறு அவர் வாழ்வனுபவங்கள் வேறு. ஆனால் இருவரும் கல்முனைப்பகுதியைச் சேர்ந்தவர்கள். நீலாவணன் பெரிய நீலாவணையினர். கோபாலகிருஸ்ணன் அங்கிருந்து ஐந்து ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள காரைதீவைச் சேர்ந்தவர். நீலாவணன் தனது சிறுவயது வாழ்வனுபங்களையும் தான் தன் முன்னோரிடம் கேட்ட வாழ்வனுபவங்களையும் வைத்துக் காவியம் புனைந்தார். அந்தப் பழைய வாழ்வுமுறைகள் பல கோபாலகிருஸ்ணன் வாழ்ந்த காலங்களில் பெரும் பாலும் இல்லாமலேயே போயிருக்கவும் கூடும். அவற்றைத் தன் நேரடி அனுபவமில்லாமல் தன் முன்னோர் அனுபவங்களுக்கூடாகப் பெற்றிருக்கவும் கூடும். சிலவேளை அவரின் மிகச் சிறிய வயதில் இவை அவரின் அடிமனதில் படிந்திருக்கவும் கூடும். முக்கியமாக மட்டக்களப்புக் கிராமப் புறங்களில் முறைப்படி செய்யும் திருமணமும், பிள்ளை பெற்ற தாயையும் பிள்ளையையும் கவனிக்கும் முறையும். அந்த இரண்டையும் கோபால கிருஸ்ணன் அழகாகக் கொணர்கின்றார். மட்டக்களப்பின் பண்டைய திருமணம் பிராமணீயச் சடங்குகள் அற்ற திருமணமாகும். பெண்ணின் தந்தை தன்மகள் கைப்பிடித்து மாப்பிளை கை கொடுப்பார்.

*கன்னியைத் தானம் செய்யக்*
*காத்திருந்த அழகிப்போடி.*
*அன்னம்மா கையைப்பற்றி*
*அதைச் செல்லன் கையில் வைத்துப்*
*பின்னினார்*

*தந்தையைப் போலும் ஊரின்*
*தலைவராம் தம்பாப்போடி*
*தந்தனர் தனையன் கையில் தாலியை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாலியைக்கட்டி ஆங்கே*
*தம்பதியானோர் வீட்டு*
*மாலுக்குள் ஏகு முன்னம்*
*மாப்பிளைத் தோழன் மச்சான்*
*கால்களைக் கழுவித் தங்க*
*கணையாழி பெற்றுக் கொள்ள*

வீட்டுக்குள் மணமக்களைக் கூட்டிச் சென்ற பின் கலத்தில் போடுதல் நடைபெறும்

*கட்டிய கணவனுக்கு*
*கலத்திலே போடவென்று*
*வட்டியும் சவரக்காலும்*
*வந்தது கனகம் ஓடி*
*சட்டிக்குள் கறிகள் ஏழு*
*தயிர் பழம் கொண்டு வந்தாள்*
*காத்திருந்தவள் போல அன்னம்*
*கையினால் பிசைந்து சோற்றைத்*
*தீத்தினாள் செல்லன் வாயில்*

இவ்வண்ணம் பண்டைய மட்டக்களப்பு முறை சார் திருமணச் சடங்கினை கோபாலகிருஸ்ணன் விவரிக்கின்றார். அன்னம் தாயாகின்றாள். அவளுக்கு மசக்கை வருகிறது. ஊரார்கள் பிள்ளைத்தாய்ச்சி அன்னத்திற்கு பலகாரம் கொண்டு வருகிறார்கள். பிள்ளைப் பேற்று நோ அன்னத்திற்குத் தோன்றுகிறது. செல்லன் சென்று மருத்துவிச்சி மணி ஆச்சியை அழைத்து வருகிறான். வீட்டுக்குளேயே மருத்துவம் நடைபெறப் பன்னீர்க் குடமுடைந்து பாலகன் பிறக்கிறான். பார்வதிப் பெத்தா ஓடிஓடிப் பரிகாரம் பண்ணலானாள். வேர்க்கொம்புக் கோப்பியோடு வெதுப்பிய வாட்டு ரொட்டியும் கொடுக்கிறாள். குழந்தை ஆண்தான் என்று உலக்கையைக் கந்தர் எறிகிறார். பிறந்த பிள்ளை யாரைப்போல இருக்கிறது என்று விமர்சனங்கள் வருகின்றன.

*தெள்ளிய தவிட்டில் பிள்ளை*
*தேகத்தைப் பிரட்டி நன்கு*
*மெல்லிய சூட்டில் நீரால்*
*மேனியக் கழுவினார்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து காட்டுப்பீ (பிள்ளை முதலில் கழிக்கும் மலம்) காணுதல். வேப்பிலை கொணர்ந்து வீட்டைச் சுற்றிப் போடுதல், கட்டாடி (துணி வெளுப்போன்) வருதல், கந்தை மாற்றல் என நிகழ்வுகள் தொடர்கின்றன.

அன்னத்தின் வயிறு இறுக்கிக் கட்டப்படுகிறது. உண்பதற்குக் கோப்பியும் உலர்ந்த பாணும் கொடுபடுகிறது. சுவாதம் போக்கும் எண்ணை தேய்க்கப் படுகிறது. பரிசாரி சொன்னதுபோல குளிசை கொடுக்கப்படுகிறது.

மூன்றாம் நாள் தாய்க்குச் சுங்கான் கருவாட்டுக் குழம்பு,குத்தரிசிச் சோறு ஒரு நேரம் மட்டும் கொடுபடுகிறது.

*வேர்க்கொம்பு மிளகு மஞ்சள்*
*வெள்ளை வெங்காயம் ஓமம்*
*சேர்க்கின்ற சரக்காம் இன்னும்*
*சீரகம் பறங்கி மல்லி*
*ஊக்கமாய்ச் சேர்த்திடித்து*
*உருண்டையாய் மாவைக் கையால்*
*ஆக்கிய காயம் அன்னம்*
*அளவோடு உண்டாள் அன்னம்*

என்று இவற்றை விபரிக்கின்றார் கோபாலகிருஸ்ணன்.

காவியத்தின் இறுதிப்பகுதிகளில் பிள்ளையையும் தாயையும் கவனிக்கும் இடங்களை அழகாக ஆசிரியர் விபரிக்கின்றார். கோபாலகிருஸ்ணன் பிரகாசிக்கும் இடங்கள் இவை எனக் கூறுவேன். குழந்தை இரண்டு நாட்கள் குளிப்பின்றியிருத்தல், ஐந்தாம் நாள் குழந்தைக்குச் சிரசில் முழுகவார்த்தல், இலை பட்டை கொதிக்கவைத்து இடுப்புக்குக் கீழ் தேய்த்தல்.

*பத்திய மீன்களோடு பதமான மிளகுதண்ணி*
*பத்திரமாகக் கொஞ்சம் பதுக்கிய சாராயத்தை*
*பொத்தியே கொடுத்தல்.*

*ஒன்பதாம் நாளில் மஞ்சள்*
*உப்பொடு கொறுக்காய் சேர்த்த*
*வெந்நீரைத் தலையில் வைத்து*
*வேர்க்கொம்பு அசமதாகம் கொடுத்தல்.*

பொடுக்கென்று ஓர் நாள் பிள்ளையின் பொக்கண்ணிக்கொடி வீழ்தல். வேர்க்கொம்பை அடுப்பில் இட்டு அரைத்து மாவாய் ஆக்கி பொக்கண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த காயத்தின் மீது வைத்தல். பன்னிரண்டாம் நாளிலும் பதின்மூன்றாம் நாளிலும் பதினாலாம் நாளிலும் தாய் பச்சைத் தண்ணீரில் குளித்தல், என தாயும் சேயும் பண்டு பராமரிக்கப்பட்ட முறைமை கூறப்படுகிறது. இடையில் ஏழாம் நாளில் குடை, பை, குடும்பி, கடுக்கனுடன் நாகன் எனும் சாத்திரியார் வருதல். வாரிசுக்குக் குறிப்பெழுதல், குறிப்பெழுதும் முறை, குழந்தைக்குப் பெயர் வைக்கப்படுகிறது.

முப்பதாம் நாள் மருங்கைகொடுத்தல் நடைபெறுகிறது. அது பிள்ளைக்கு மயிர் வழிக்கும் சடங்காகும். ஊரெல்லாம் கூடிவர மருங்கை நடைபெறுகிறது. மருங்கையின் இறுதியில் மருத்துவப் பெண்ணுக்கு, கட்டாடிக் காத்தானுக்கு, பாபர் கணபதிக்கு பட்டுப்போல் வேட்டி பணம் எட்டுறாம் போத்தல் என்பன அளிக்கப்படுகின்றன. ஊராரெல்லாம் தங்கள் வசதிக்கு ஏற்ப குழந்தைக்குப் பரிசளிக்கிறார்கள்.

*விருந்துக்கு முன்னால் செல்லன் வீட்டிற்கு வந்தோர்க்கெல்லாம்*
*'மருந்துகள்' தந்தான் பிள்ளை, மருங்கையின் பேரில் ஆண்கள்*
*அருந்தினர் அளவாய் பின்னர் அனைவரும் அமுதம் உண்டு*
*விருந்தென்றால் விருந்து மாரி விளச்சல் போல் வியந்து மீண்டார்*

எல்லோரும் சேர்ந்து இன்புற்றிருந்தனர் என்று கூறி விளைச்சலை வேண்டி என்றும் வேளாண்மை செய்து வாழ்வோம்!

என காவியத்தை முடிக்கின்றார் ஆசிரியர்.

நீலாவணனின் கவித்துவமும் வீச்சும் மிக மிகப் பெரிது. பாடும் மீன் நடத்திய போது அவர் ஒரு நடைச் சித்திரம் எழுதினார். அதில் அழகாக கிராமிய பாத்திரங்களின் குணாதிசயங்களைக் கொணர்ந்தார். கிராமத்தில் வாழ்ந்து, கிராமத்தில் தோய்ந்து,கிராமியனாகவே வாழ்ந்த அவரால் அது இலகுவாக முடிந்தது. சின்னப் பாத்திரங்களையும் குணாதிசயமிக்க பாத்திரங்களாக மாற்றிவிடும் ரசவாத உத்தி அவரின் கைவந்த கலையாக இருந்தது. நீலாவணன் பாத்திரங்களை அதே குணாம்சங்களோடு வளர்த் தெடுக்க வேண்டுமே என்ற பயமும் கோபாலகிருஸ்ணனிடம் இருந்திருக்கிறது போலவே படுகிறது. அடியொற்றிச் செல்பவராகவும் முடித்துவைப்பவராகவும் இருக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் தன் இஸ்டப்படி புகுந்து விளையாட இன்னொரு வகையிற் சொன்னால் தன் சிந்தனைக்கு ஏற்பப் பாத்திரங்களைப் படைக்கும் சுதந்திரம் கோபாலகிருஸ்ணனுக்குக் கிடைக்கவில்லை. இது விளச்சலில் தென்பட்டாலும் கோபாலகிருஸ்ணனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றொழுக்கு நடை அழகாக வந்திருக்கிறது. தன் முறை மச்சானான செல்லனுடன் கல்முனைப் பள்ளியிலும், பாண்டிருப்புத் திரௌபதியம்மன் பள்ளயச் சடங்கிலும் ஏற்பட்ட உறவுகளைக் கூறி அவர்களின் காதலை ஒரு பின்னோக்கு உத்தியில் கூறியிருப்பதையும் நாம் இங்கு மனம் கொள்ளல் வேண்டும்.

இன்றைய வாழ்க்கையுடன் சாதாரணமாக ஒப்பிடுகையில் பண்டைய வாழ்வின் செழுமையும், அதன் கூட்டுறவுத் தன்மையும்,அவர்கள் வாழ்ந்த முறைமையும் அவர்களின் நிலமானிய விழுமியங்களும் நமக்குச் சிறப்பாகத் தெரிகின்றன. சிறப்பு மட்டுமா கிராமிய வாழ்வு? இல்லை அதன் சிறப்பின்மையும் சேர்ந்ததுதான் கிராமிய வாழ்வு. கிராமிய வாழ்வை ஒரு மனோரதியத் தன்மையுடன் கூறும் தன்மை நம்மிற் பலரிடம் காணப்படுகிறது.

கிராமம் மனோரதியமானது மாத்திரமல்ல ஏழ்மையும் நுணுக்கமான சமூகஏற்றத் தாழ்வுகளும் கருத்துக்குப் புலனாகாத சமூக அடக்கு முறை களும் உள்ளூர் அரசியல்களையும் கூடக் கொண்டது. கோவில் தொடக்கம் கூத்துவரை இது வியாபித்துக் காணப்படுகிறது. விமர்சனப் பாங்கில் கிராமத்தை அணுகுவோர் இவற்றை இலகுவாகக் கண்டுகொள்வர்.

கவி சொல்லும் வன்மை மிக்க கோபாலகிருஸ்ணன் தன் அனுபவங் களுக்கூடாக மாறிவரும் மட்டக்களப்பின் உண்மையான கிராம வாழ்வைக் கொண்டுவர வேண்டும் என்பதே எமது அவா. விளச்சலைக் கொணர்ந்த அவர் கிராமத்தின் முரண்பாட்டையும் வளர்ச்சியையும் காவியமாகத் தருவார் என எதிர் பார்ப்போம். அதற்கான நோக்கும் போக்கும் அனுபவமும் அவரிடம் உண்டு. ஏனெனில் நீலாவணன் வாழ்ந்த காலமும் சிந்தனையும் சூழலும் வேறு. கோபாலகிருஸ்ணன் வாழும் காலமும் சிந்தனையும் சூழலும் வேறு. விளைச்சல் காவியம் தந்த கோபாலகிருஸ்ணனுக்கு என் வாழ்த்துக் களும் பாராட்டுக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவெட்டி

**'விளைச்சல்' காவியம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின்**
**வெளியீடான 'ஓலை' மாதாந்த சஞ்சிகையில் தொடராக**
**வெளிவந்த காலத்தில் வாசகர்களிடமிருந்து வந்த இரசனைக் குறிப்புகள்.**

**ஓலை – 16 (மே 2003)**

உண்மை உறவறியும் ஊர்ப்பண்பை 'வேளாண்மை'
சொன்னவழியே துணிந்ததனால் செங்கதிரோன்
கன்னல் சாறாக கனிந்தே 'விளைச்சல்' வரும்
உன்னிப்பாய் காப்போம் உளத்தே

- கவிஞர் வெல்லவூர்க்கோபால்
143/22, எல்லைவீதி, மட்டக்களப்பு

**ஓலை – 18 (யூலை 2003)**

தமிழ்ச்சங்கம் வெளிக்கொணரும் 'ஓலை' இதழில் 'செங்கதிரோன்' எழுதும் கவிஞர் நீலாவணனின் வேளாண்மைக்காவியத்தின் தொடர்ச்சியாக வரும் 'விளைச்சல்' மிகச் சிறந்த செய்யுள் நடையில் அமைந்திருப்பதைக் கண்டு உளம்பூரித்தேன். இலகு தமிழில், பேச்சு மொழியே போன்ற நடையில் கவிதை எழுதிய நீலாவணன், மகாகவி இவர்களின் வாரிசாக அதே இலகு நடையில், கவிதை எழுதவல்லவர், இக்காலத் தமிழ்க் கவிதைக்குப் பெரும் சேவை செய்பவர் என்பதைக் காலம் விளக்கும். புதுப்புது உதிரியாய் முறிந்த வசனங்களாய் ஆகிவிட்ட கவிதைக் கலையை மீண்டும் செவ்விய நடையில் நடைபயில விட்டிருக்கும் அரும்பெரும் முயற்சியை மனம் திறந்து நிறைவோடு வாழ்த்திப் போற்றுகின்றேன்.

இம்முயற்சி வெற்றி பெறுவதோடு எதிர் காலத்தில் மண்வாசனையோடு கவிதை புனைவோர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமையவல்லது. வாழ்த்துக்கள்.

இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம்
முன்னாள் தலைவர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்
09/05/2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓலை – 18 (யூலை 2003)**

செங்கதிரோன் எழுதும் 'விளைச்சல்' குறுங்காவியம் இனிமையாய் சரளமான நடையில், சுவையாக வளர்க்கப்படுகிறது அருமை.

- வல்லிக்கண்ணன்
10, Vallalar Flats, new st
Lioyds Rd, Chennai - 600005
Tamilnadu, South India
16/05/2003

**ஓலை – 20 (செப்ரெம்பர் 2003)**

கவிஞர் செங்கதிரோன் அவர்களே!

கவிஞர் நீலாவணன் அரைகுறையில் விட்டுச் சென்ற 'வேளாண்மை'க் காவியத்தை அவர் பாணியிலேயே தொடர்ந்தெழுதி முடிக்கவேண்டுமென உறுதிபூண்டு 'விளைச்சல்' எனும் தலைப்பில் நீங்கள் எழுதி வருவதை வாசித்தேன். அருமையாக உள்ளது. இதை நிரூபித்தும் வருகின்றீர்கள். நீலாவணனின் ஆத்மா கவியுலகில் இனித்தான் சாந்தி பெறும்.

- சக்திதாசன்
176/3, W.A.De சில்வாமாவத்தை
கொழும்பு - 06
27.05.2003

**ஓலை – 20 (செப்ரெம்பர் 2003)**

கவிஞர் நீலாவணன் விட்ட இடத்திலிருந்து தொடரும் 'விளைச்சல்' அவர் எழுதிய அதே பாணியில் அமைந்திருப்பது ஆச்சரியம்தான். எப்படி இது....? தாங்கள் இப்போது எழுதும் தொடர் மூல ஆசிரியர் எழுதியது போலவே அமைந்துள்ளது. பாராட்டுக்கள்.

இரா. நாகலிங்கம் (அன்புமணி)
18, நல்லையா வீதி மட்டக்களப்பு
30.06.2003

**ஓலை – 20 (செப்ரெம்பர் 2003)**

ஓலையின் குறுங்காவியம் 'விளைச்சல்' அற்புதம். மிகமிக நயந்தேன்

- செல்லப்பா நடராசா
தினகரன் அலுவலக முன்னைநாள் பத்திரிகையாளர்
பாராளுமன்ற ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'விளைச்சல்' காவியம் 'செங்கதிர்' சஞ்சிகையில் தொடராக மாதாந்தம் வெளிவந்த காலத்தில் வாசகர்களிடமிருந்துவந்த இரசனைக் குறிப்புகள்**

**செங்கதிர் – வீச்சு 6 (ஆனி 2008)**

கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'
செங்கதிரோன் கைவண்ணத்தால் விளச்சலாகி
தமிழ்ச்சங்க 'ஓலை'யில் தொடங்கி செங்திரோன்
'செங்கதிர்' இலும் காணக்கிடைப்பது
ஒரு சிறப்பம்சமாகவே கருதுகிறேன்.

என். மணிவாசகன் ஜே.பி
ஆசிரியர் 'சங்கதி'
அக்கரைப்பற்று 7/3

**செங்கதிர் – வீச்சு 7 (ஆடி 2008)**

செங்கதிர் சஞ்சிகையில் நீங்கள் எழுதும் 'விளைச்சல்' காவியம் அசல் நீலாவணன் எழுதுவது போலவே உள்ளது.

- அக்கரைச்சக்தி
D/G/1 வேலுவனாராம தொடர்மாடி
கொழும்பு - 06

**செங்கதிர் – வீச்சு 12 (மார்கழி 2008)**

செங்கதிரோனின் விளைச்சலோ தொடர்ந்தும் பிரமாதமே.

- கன்னிமுத்து வெல்லபதியான்
சரவணமுத்து நவேந்திரன்)
பழைய சோமநாதர் வீதி, பாண்டிருப்பு, கல்முனை

**செங்கதிர் – வீச்சு 14 (மாசி 2009)**

விளைச்சல் குறுங்காவியம் எங்களையெல்லாம் அழிந்துபோன எங்கள் மூதாதையர்களின் இல்லங்களுக்கு அழைத்துப்போய் அவர்களின் கலாசாரம், பண்பாடுகளோடு ஒன்றித்து வாழச் செய்து விடுகிறது. படிக்கப் படிக்க இனிக்கிறது. இது எல்லோராலும் எழுதமுடியாது. இதற்கு ஒரு தகுதியும் ஆளுமையும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் உங்களிடத்தில் இருப்பதுகண்டு மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் மத்தியில் இனி நாட்டாரியல் சாகாது. அது உங்களைப் போன்றவர்களால் கட்டாயம் வாழும் என்று கூறுவதில் நானும் ஒரு நாட்டாரியல் ஆய்வாளன் என்ற வகையில் பெருமைப்படுகின்றேன்.

அல்ஹாஜ் எஸ்.முத்துமீரான்
நிந்தவூர் - 12

**செங்கதிர் – வீச்சு 18 (ஆனி 2009)**

செங்கதிரோன் விளைச்சலிலே
செதுக்குகிற நறுங்கவிதைச் சிறப்புக் கண்டோம்.
பங்குனியில் அவர் தந்த முதலிரவுப்
படம் அருமை... பாராட்டுக்கள்!

- கவிமணி நீலாபாலன்
இல: 65, ஹத்தாவுல, வெலிமடை.

**செங்கதிர் – வீச்சு 20 (ஆவணி 2009)**

செங்கதிரோன் எழுதும் 'விளைச்சல்' குறுங்காவியம் மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் சிருங்காரரசம் ததும்புவதாகவும் உள்ளது. இதை ஆசிரியர் தானே அனுபவித்து எழுதுவது படிக்கும்போது நன்கு தெளிவாகிறது. எவரும் அதைத் திரும்ப திரும்ப படித்து ரசிக்கக் கூடியவாறு எழுதப்பட்டுள்ளது. மிகவும் அழகான மரபுக் கவிதைகள் மூலம் கம்பீரமான தனது கவித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

கவிஞர் கா. சிவலிங்கம்
இல.06, ஈஸ்பரன் ஒழுங்கை, மட்டக்களப்பு.

**செங்கதிர் – வீச்சு 23 (கார்த்திகை 2009)**

செங்கதிர் ஆசிரியர் செங்கதிரோன் எழுதும் 'விளைச்சல்' குறுங்காவியம் பச்சைப்பசேலென்று விளங்கும் படுவான்கரைப் பகுதி மக்களின் பண்பாட்டுக் கோலங்களை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. எழுவான் கரையிலும் எத்தனையோ கிராமங்களில் இதுதான் வாழ்வியல் என்றாலும் வாசிக்கும்போது மனத்திரையில் ஓடுவது அந்த வளம் மிக்க படுவான்கரைப் பகுதிதான். அத்துடன் மாபெரும் கவிவேந்தர் நீலாவணன் அவர்களின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சியாக வருகின்ற 'விளைச்சல்' நீலாவணன் அவர்களே எழுதுவதுபோல இயல்பாகவும் தரமாகவும் சுவையாகவும் வருகிறது.

- அவுஸ்ரேலியாவிலிருந்து செந்தமிழ்ச்செல்வர்
பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செங்கதிர் – வீச்சு 24 (மார்கழி 2009)**

நீலாவணன் காவியத்தை நீட்டி மீண்டும்
நெஞ்சினிலே நிலைத்திருக்குமாறு கவி
கோலாகலமான முறை பிழிந்தெடுத்து
கொடுக்கின்ற செங்கதிரோன் வாழ்க! வாழ்க!

- துறையூர் க. செல்லத்துரை.

**செங்கதிர் – வீச்சு 25 (தை 2010)**

'விளைச்சல்' குறுங்காவியம் இன்னுமொரு 'வேளாண்மை'. மரபுக் கவிதைகள் இப்படியும் எளிமையாய்.... புருவங்கள் உயர்கின்றன.

சமரபாகு சி. உதயகுமார்
வல்வெட்டித்துறை.

**செங்கதிர் – வீச்சு – 25 (தை 2010)**

செங்கதிரோனின் விளைச்சல் குறுங்காவியம் இலகுவான நடையில் அருமையாக எதுகை, மோனையோடு ஓசையின்பத்தோடு கருத்தோட்டமும் பொருட்செறிவுமுள்ள இனிமையான கவிதைகள்.

- க.ஐயம்பிள்ளை
இல:12, சிந்தாமணிப்பிள்ளையார் வீதி
கற்குழி, வவுனியா.

**செங்கதிர் – வீச்சு – 26 (மாசி 2010)**

'விளைச்சல்' அருமையானதொரு குறுங்காவியம். கிழக்குமாகாணக் கிராமியக் கலாசாரத்தினை என்போன்றோரின் நினைவில் மீண்டும் பசுமைப்படுத்துகிறது.

S.H முஹமட் ஜமீல்
44A, Asiri Mw, Kalubowila
Dehiwela.

**செங்கதிர் – வீச்சு 27 (பங்குனி 2010)**

விளைச்சல் குறுங்காவியத் தொடர் (அறுசீர் விருத்தம்) நன்றாகப் போகின்றது.

- தாமரைத்தீவான்
சோ. இராசேந்திரம்
25/5, 2ம் ஒழுங்கை, 1ம் தெரு,
லிங்கநகர், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செங்கதிர் – வீச்சு 28 (சித்திரை 2010)**

அனைத்து விடயங்களிலும் 'விளைச்சல்' என்ற தங்கள் கவிதைத் தொடரே எனக்கு மிகவும் பிடித்தது. படுவான்கரைப் பேச்சு மொழிக்கு இலக்கிய அந்தஸ்த்து அளித்துள்ளீர்கள். அபாரமான கவித்துவம். தொடர் முடிந்ததும் அதை நூலாக வெளியிட வேண்டும். இப்போதே ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.

இரா. நாகலிங்கம் (அன்புமணி)
34, புதிய வன்னியனார் தெரு, மட்டக்களப்பு.

**செங்கதிர் – வீச்சு 30 (ஆனி 2010)**

நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தை நிறைவாக்கிக் கொள்ளும் அவாவில் 'விளைச்சலை'ச் செங்கதிரோன் தந்துள்ளார். செங்கதிரோனின் மட்டக்களப்பு வாழ்வியலைக் கவிதையாக்கும் முயற்சி பாராட்டத்தக்கது.

- திருவேணிசங்கமம்
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்

'விளைச்சல்' காவியத்தை எழுதத் தூண்டிய கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி சோ.தேவராஜா

உற்சாகமூட்டிய கொழும்புத்தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் இலக்கியச் செயலாளர் / துணைத்தலைவர் / பொதுச் செயலாளர் ஜின்னாஷரிபுத்தீன் மற்றும் கவிஞர் நீலாவணனின் மகன் எழில்வேந்தன்.

காவியத்தை நூலுருவாக்கும்படி அடிக்கடி என்னை ஊக்கப்படுத்திய எனது கல்லூரி நண்பன் க. ஆறுமுகம் (அமரர்) மற்றும் எழுத்தாளர் ஆ.மு.சி. வேலழகன்

**பொலி தூற்றிய**

- ☐ உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்
- ☐ பேராசிரியர் எம்.ஏ. நு.்.மான்
- ☐ கவிஞர் சண்முகம் சிவலிங்கம் (அமரர்)
- ☐ பேராசிரியர் சி. மௌனகுரு

ஆகியோருக்கும், நூலுருவாக்கித்தந்த நண்பர் க. குமரன் அவர்களுக்கும் விளைச்சலின் 'புதிர்' எடுத்து நான் வழங்கும் நன்றிப் பொங்கல் உரித்தாகட்டும்.

**- செங்கதிரோன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் அவர்களை ஆசிரியராகவும் அன்பழகன் குருஸ் அவர்களைத் துணை ஆசிரியராகவும் கொண்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழான 'செங்கதிர்' 30.01.2008இல் தோற்றம் பெற்றது. இதன் வரவைத் தொடர்ந்து மட்டக்களப்பில் 'செங்கதிர்' வாசகர்களினால் உருவானதே 'செங்கதிர்' இலக்கிய வட்டம். இதன் ஸ்தாபகத் தலைவராக கிழக்கிலங்கையைச் சேர்ந்த முதுபெரும் ஈழத்து எழுத்தாளர் அமரர் அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்கள் விளங்கினார். 'செங்கதிர்' இலக்கிய வட்டத்தின் உருவாக்கத்திற்குக் காரணகர்த்தாவும் அவரே. அவரின் மறைவைத் தொடர்ந்து 'செங்கதிர்' இலக்கிய வட்டத்தின் தலைமைப் பொறுப்பு என்னை வந்தடைந்தது. 'செங்கதிர்' இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நூல் அறிமுகம், நூல் வெளியீடு, இலக்கியச் சந்திப்பு என்று பல இலக்கிய நிகழ்வுகளை நடத்திய எமது செயற்பாட்டின் விரிவாக்கமாக எமது இலக்கிய வட்டத்தின் முதலாவது வெளியீடாக செங்கதிரோனின் 'விளைச்சல்' குறுங்காவியம் வெளிவருகிறது.

ஈழத்தில் இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய தரமான கவிஞர் களுள் செங்கதிரோன் அவர்களும் ஒருவர். பேச்சோசைப் பாங்கிலான நவீன கவிதைகளின் முன்னோடிகளாகக் கருதப்படும் அமரர்கள் மகாகவி, நீலாவணன் வரிசையில் வைக்கப்படும் தகுதியைச் செங்கதிரோன் இவ் 'விளைச்சல்' காவியத்தின் மூலம் அடைந்துவிட்டார் என்பது எனது கணிப்பீடு ஆகும். மட்டக்களப்பு மாநிலத்துக் கிராம மக்களின் குறிப்பாக படுவான்கரைப் பிரதேச மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் இவ் 'விளைச்சல்' காவியம் ஈழத்து இலக்கியப் பரப்பில் நின்று நிலைக்கும் என்பது நிச்சயம். இக்காவியம் தந்த கவிஞர் செங்கதிரோன் த.கோபால கிருஸ்ணனுக்கு எனது மனமுவந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**- செல்வி. க. தங்கேஸ்வரி பி.ஏ. சிறப்பு** (தொல்லியல்)

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

தலைவர், 'செங்கதிர்' இலக்கிய வட்டம், மட்டக்களப்பு

ISBN 978-955-7409-00-9

9 789557 409009

விலை ரூபா 400.00

Printed by Kumaran Press (Pvt) Ltd 0112 364550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org